வருடாந்த அறிக்கை
2020

உள்ளடக்கம்

		பக்க இல.
1.	வரலாறு	1
2.	தொலை நோக்கு, செயற்பணி மற்றும் நோக்கங்கள்	4 - 5
3.	பதவிநிலைக் கல்லுரரியின் செயற்பாடுகள் மற்றும் நிறுவகக் கட்டமைப்பு	5 - 7
4.	பாடவிதானம்	7 - 9
5.	பயிற்சிச் செயற்பாடுகள்	9 - 34
6.	நிர்வாகம் மற்றும் படையின் செயற்பாட்டு வழங்கல்	34 - 39
7.	பரிந்துரை	39 - 42
8.	மீளாய்வு	42

இணைப்பு

அ	கணக்காளரின் அறிக்கை	அ– 1 – அ 2
ஆ	நிதிக்கூற்றுக்கள்	ஆ– 1 – ஆ - 23
இ	உள்ளகக் கணக்காய்வு உத்தியோகத்தரின் கூற்று	இ- 1 - இ - 2
ஈ	கல்வி அபிவிருத்தி மற்றும் முன்னேற்றம்	ஈ- 1 - ஈ - 6
உ	கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை	உ-1 – உ - 9

அட்டவணைகள்

பக்க இல.

அட்டவணை - 1	பா.சே.க.ப. பாடநெறி 14 ஐப் பின்பற்றிய மாணவ அதிகாரிகளின் எண்ணிக்கை	08
அட்டவணை - 2	பா.சே.க.ப. பாடநெறி இல 14 இற்கு உரித்தான பெறுபேறுகள்	09
அட்டவணை - 3	வாகனப் பொழிப்பு	35
அட்டவணை - 4	இராணுவத்தினால் வழங்கப்பட்ட வாகனங்கள்	36
அட்டவணை - 5	கடற்படையால் வழங்கப்பட்ட வாகனங்கள	36
அட்டவணை - 6	விமானப் படையினால் வழங்கப்பட்ட வாகனங்கள்	37
அட்டவணை - 7	பாதுகாப்பு அமைச்சினால் வழங்கப்பட்ட வாகனங்கள்	37
அட்டவணை - 8	வாடகை அடிப்படையில் பெற்றுக்கொண்ட வாகனங்கள்	37

வருடாந்த அறிக்கை - 2020
பாதுகாப்புச் சேவை கட்டளை மற்றும் பதவிநிலை கல்லூரி வரலாறு

1. பாதுகாப்புச் சேவை கட்டளை மற்றும் பதவிநிலை கல்லூரி ஆரம்பத்தில் இராணுவ கட்டளை மற்றும் பதவிநிலைக் கல்லூரியாக 1998 மார்ச் மாதம் 16 ஆம் திகதி 26 மாணவ அதிகாரிகளைக் கொண்டு ஆரம்பிக்கப்பட்டது. எனினும் கல்லூரி உத்தியோகபூர்வமாக முன்னாள் படைத்தளபதி லெப்டினன் ஜெனரல் ஆர்டிஎஸ் தலுவத்த டபிள்யூடபிள்யூவீ ஆர்டபிள்யூபீ ஆர்எஸ்பீ வீஎஸ்வீ யூஎஸ்பீ எல்ஓஎம் என்டீசீ பீஎஸ்சீ அவர்களின் அழைப்பின் பேரில் முன்னாள் ஜனாதிபதி அதிமேதகு சந்திரிகா பண்டாரனாயக குமாரதுங்க அவர்களால் 1998 ஆகஸ்ட் மாதம் 28 ஆம் திகதி உத்தியோகபூர்வமாக திறந்து வைக்கப்பட்டது.

2. பிரித்தானிய இராணுவத்தின் பதவிநிலை கல்லூரியின் இரண்டு லெப்டினன் கேர்னல்களின் ஆலோசனையில் பிரித்தானிய பதவிநிலை கல்லூரியின் பாடத்திட்டத்தைப் பின்பற்றி இலங்கை இராணுவத்தின் தேவைப்பாட்டிற்கு அமைவாக ஒரு பாடத்திட்டம் தயாரிக்கப்பட்டது. இராணுவத்தின் கட்டளை மற்றும் பதவிநிலை கல்லூரி, ஆரம்பத்தில் இவ் உத்தியோகத்தர்களால் பயிற்சி ஆவணங்கள் வழங்கியும் விரிவுரை உத்தியோகத்தர்களின் இயலுமையை மேம்படுத்துவதன் மூலம் கல்லூரியின் வெற்றிக்காக விசேட பங்களிப்பு வழங்கப்பட்டது.



1998 ஆகஸ்ட் 28 ஆம் திகதி நிகழ்ந்த ஆரம்பிப்பு

3. தேர்ந்தெடுக்கப்பட்ட இராணுவ அதிகாரிகளின் கட்டளை மற்றும் பதவிநிலை கடமைகளின் போது தொழிற்திறன் அறிவு மற்றும் புரிந்துணர்வை விருத்திசெய்யும் நோக்குடன் இராணுவக் கட்டளை மற்றும் பதவிநிலைக் கல்லூரி ஆரம்பிக்கப்பட்டது. இதற்கு மேலதிகமாக இலங்கை கடற்படை மற்றும் விமானப்படை அதிகாரிகள் சிலரும் இப் பாடநெறிக்காகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருந்ததுடன் அவர்களும் இராணுவக் கட்டளை மற்றும் பதவிநிலைக் கல்லூரி பாடநெறி இல. 1 இன் பாடநெறியில் கலந்து கொண்டிருந்தனர். 1998 முதல் 2006 வரை கல்லூரியால் 252 பட்டதாரி அதிகாரிகள் உருவாக்கப்பட்டிருந்ததுடன் இராணுவ அதிகாரிகள் 208 பேரும், கடற்படை அதிகாரிகள் 22 பேரும், விமானப்படை அதிகாரிகள் 21 பேரும் ஒரு பொலிஸ் அதிகாரியும் இதில் உள்ளடங்குவர். நாட்டில் நிலவும் பாதுகாப்பு நிலவரங்களுக்கு அமைவாக முப்படையின் ஒன்றிணைந்த பயிற்சியின் தேவைப்பாடு உணரப்பட்டிருந்தமையால் பதவிநிலைக் கல்லூரியால் முப்படையினருக்கு ஒன்றிணைந்த நியாயபூர்வமான மற்றும் பிரயோக ரீதியிலான பயிற்சிகளை

வழங்குவதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டது. மேலும், ஒன்றிணைந்த இராணுவப் பயிற்சிச் சூழலை உருவாக்குவதற்காக போர்த் தர்மங்கள் மற்றும் நோக்குகளை மீளக் கட்டியெழுப்பி இக்காலத்திற்கு பொருந்தும் வகையிலான ஒன்றினைந்த பயிற்சிப் பாடநெறியை அமைப்பதற்கு முன்வரப்பட்டது.

4. 2007 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 22 ஆம் திகதி, இலங்கை பாதுகாப்புப் படையின் முக்கிய மைல்கல்லாக அமைந்தது. உலகின் ஏனைய நாடுகளைப் போன்று முப்படையினருக்கு நியாயபூர்வமானதும் பௌதீக ரீதியான பயிற்சி ஒன்றை வழங்குவதற்காக ஒரே இடத்தைத் ஸ்தாபிப்பதற்காக பதவிநிலைக் கல்லூரி விசேட இடத்தைக் கொண்டமைந்திருந்தது. கட்டளை மற்றும் பதவிநிலைக் கல்லூரி எனும் பெயரில் ஸ்தாபிக்கப்பட்ட இக் கல்லூரி ஜனாதிபதி அவர்களின் செயலாளர் திரு. லலித் விரதுங்க அவர்களால் உத்தியோகபூர்வமாக பாதுகாப்புச் சேவை கட்டளை மற்றும் பதவிநிலை கல்லூரியாக (பாசேகபக) ஸ்தாபிக்கப்பட்டது. இதற்கு இணையாக இராணுவ அதிகாரிகள் 36 பேரையும், கடற்படை அதிகாரிகள் 8 பேரையும், விமானப் படை அதிகாரிகள் 10 பேரையும், உள்ளடக்கி பாதுகாப்புச் சேவை கட்டளை மற்றும் பதவிநிலை கல்லூரி, முதலாவது பாடநெறியை அன்றைய தினம் பதிவு செய்து ஆரம்பித்து வைக்கப்பட்டது. அடுத்த ஆண்டின் போது 2008 இன் 05 ஆம் இலக்க பாதுகாப்பு சேவை கட்டளை மற்றும் பதவிநிலைக் கல்லூரி அதிகாரச்சட்டம் என அறிமுகமான அதிகாரச்சட்டத்தின் கீழ் 2008 பெப்ரவரி மாதம் 22 ஆம் திகதி இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியின் II ஆம் பகுதியின் மேலதிக இணைப்பாக வெளியிடப்பட்டது.



2007 ஜனவரி மாதம் 22 ஆம் திகதி பாதுகாப்புச் சேவை கட்டளை மற்றும் பதவிநிலை கல்லூரி ஆரம்பிப்பு

பழைய சின்னம் **புதிய சின்னம்**

"சிகிறுவனின் ரண தெரணட" அறிவினாலும் புத்தியினாலும் போரிடல்

5. கிரேக்க வரலாற்றில் குறிப்பிட்டவாறு ஆதர் மன்னனின் சின்னமாக விளங்கும் ஆந்தை அறிவை வெளிப்படுத்தும் பட்சியாக இனங்காணப்படுகின்றது. மத்திய யுகத்தில் அக் காலத்தில் வாழ்ந்த வணக்கத்திற்குரிய மற்றும் அறிஞர்களின் அறிவு, புத்திசாதுரியம் மற்றும் முதிர்வுத்திறனைப் பிரதிபலிக்கும் சின்னமான குறியீடாகவும் ஆந்தை அடையாளச்சின்னமாகப் பயன்படுத்தப்பட்டுள்ளது.

6. உரோம நாட்டு புராணங்களில் குறிப்பிடப்பட்டவாறு யுத்தம் மற்றும் விவேகத்திற்கான அதிபதியாக மினர்வா பெண் தெய்வம் கருதப்படுகிறது. அவரது மிகப் பிரியமான பறவையாகவும் வாகனமாகவும் ஆந்தையே இருந்துள்ளது. ஆந்தையை அறிவின் சின்னமாகக் கருதி அப் பறவையே கட்டளை மற்றும் பதவிநிலை கல்லூரியின் சின்னமாக ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. " சிஹுனுவனின் ரண தெரணட" என்ற தொனிப்பொருள் முன்வைக்கப்பட்டு இராணுவம், கடற்படை மற்றும் விமானப்படையைப் பிரதிநிதித்துவப் படுத்துவதற்காக செம்மஞ்சள் நிறப் பின்னணியில் இரு வாள்களாலும், கடும் நீல நிற பின்னணியில் நங்கூரத்தினாலும், இள நீல நிறப் பின்னணியில் அல்படோஸ் பறவையினாலும் சித்தரிக்கப்பட்டு அம் முக்கூறின் நடுவே ஆந்தை சித்தரிக்கப்பட்டு பாதுகாப்பு சேவை கட்டளை மற்றும் பதவிநிலைக் கல்லூரி உத்தியோகபூர்வச் சின்னம் உருவாக்கப்பட்டுள்ளது.

தொலை நோக்கு

7. தெரிவு செய்யப்பட்ட முப்படை அதிகாரிகள் மற்றும் அரச நிறுவக அதிகாரிகளின் தொழிற்திறன் அறிவாற்றலை விருத்தி செய்து இராணுவ அதிகாரிகள் மேஜர்/ லெப்டினன் கேர்னல் தர பதவி நிலைகளிற்காகவும், கடற்படை அதிகாரிகளில் லெப்டினன் கொமாண்டர்/ கொமாண்டர் பதவி நிலைகளிற்காகவும் விமானப்படையின் அதிகாரிகள் வலுப்படுத்தும் தலைவர்/ வின்ங் கொமாண்டர் பதவிகளிற்காகவும் ஏனைய அரச நிறுவனங்களின் அதிகாரிகள் அவர்களுக்கு உகந்த பதவிநிலைத் தரங்கங்கள் மற்றும் பொலிஸ் அதிகாரிகள் தமது நிறுவகங்களில் கட்டளை மற்றும் பதவிநிலைத் தரங்களிற்காகப் பயிற்சி அளிப்பதும் கல்லூரியின் தொலைநோக்காகும்.

செயற்பணி

8. முப்படையில் இருந்து தேர்தெடுக்கப்பட்ட அதிகாரிகளிற்கு பதவிநிலை உத்தியோகத்தர் இரண்டாம் தரத்தினதும் இதற்கு மேலான பதவிகளில் கடமைகளைத் திறன்பட மேற்கொள்வதற்காக தேவையான அறிவை வழங்குவதற்காகவும் அவர்களிடையே தனிப்பட்ட மற்றும் தொழிற்திறன் ஒழுக்கவியல் திறன் விருத்தியை ஏற்படுத்துவதற்காகவும் கட்டளை மற்றும் பதவிநிலை நியமனங்களில் ஆக்கபூர்வமாக செயற்படுவதற்கான இயலுமையை வழங்குவதே செயற்பணி ஆகும்.

நேக்கங்கள்

9. பிரதான நோக்கங்கள் பின்வருமாறாகும்

அ. யுத்தம் மற்றும் சமாதானம் ஆகிய இரு சந்தர்ப்பங்களின் போதும் செயற்பட வேண்டிய விதம் மற்றும் இதற்கு உரித்தாக தொழிற் பண்புகள் குறித்தும் அறிந்திருத்தல்.

ஆ. எந்த விதத்திலுமான போர்ச் செயற்பாட்டின் போதும் இராணுவத்தில் உள்ளடங்கியுள்ள போரின் அடிப்படைக் கோட்பாடுகளையும் தொழிநுட்ப முறைகள் தொடர்பாகவும் அறிந்துகொண்டு இதன் மூலம் பொதுவாக ஒன்றிணைந்து செயற்படுதல்.

இ. இராணுவப் படையணி அல்லது கடற்படை மற்றும் விமானப்படைகளில் இதற்கு இணையான மட்டத்தில் கட்டளையிடும் பொறிமுறைச் செயற்பாடுகள் தொடர்பான பகுப்பாய்வு ரீதியான அறிவு.

ஈ. இலங்கையின் ஆயுதமேந்திய இராணுவப்படையணியின் பங்கேற்பின் வியூகத்தை விருத்தி செய்து புரிந்துணர்வு தொடர்பாக அறிவூட்டல்.


உ. இலங்கையில் பாதுகாப்பு கொள்கை உருவாக்கப்பட்டுள்ள முறை மற்றும் இராணுவ வழியமைப்பு அதனுடன் தொடர்புற்றுள்ள விதம் குறித்து அறிந்துகொள்ளல்.

ஊ. இலங்கையினதும் அதன் நட்புறவு நாடுகளினதும் பாதுகாப்புக் கொள்கைகளுக்கு தாக்கங்களை உண்டுபண்ணக்கூடிய தேசிய மற்றும் சர்வதேச விடயங்கள் தொடர்பான விளக்கம்.

<u>பதவிநிலைக் கல்லுரரியின் செயற்பாடுகள் மற்றும் நிறுவகக் கட்டமைப்பு</u>

10. **அமைப்பு பதவிநிலைக் கல்லுரரியின் நிறுவகக் கட்டமைப்பு** MOD/CSCB/4/(73) 2010 பெப்ரவரி 24 ஆம் திகதிய கடிதத்தின் கீழ் பாதுகாப்பு அமைச்சின் மூலம் அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

முகாமைத்துவ சபை அங்கீகரித்த பாதுகாப்புச் சேவை கட்டளை மற்றும் பதவிநிலை கல்லூரியின் நிறுவகக் கட்டமைப்பு



11. **தொழிற்பாடுகள்** பதவிநிலைக் கல்லூரியில் நேர்க்கங்களை எய்துவதற்காக அதற்கு ஒப்படைக்கப்பட்டுள்ள தொழிற்பாடுகள் பின்வருமாறாகும்.

அ. ஆயுதமேந்திய இராணுவ உத்தியோகத்தர்களை பதவிநிலைக் கல்லூரியில் கல்விப் பாடநெறிகளிற்காக அனுமதித்தல்.

ஆ. பொலிஸ் திணைக்களம் அல்லது இலங்கைக்கு அப்பால் உள்ள இராணுவ அமைப்புகளின் அங்கத்தவர்களை கல்லூரிப் பாடநெறிகளைப் பயில்வதற்காக அனுமதித்தல்.

இ. கல்லூரியின் கல்விச்சபையினால் தீர்மானிக்கப்பட்டவாறு பாதுகாப்பு மற்றும் இராணுவ முகாமைத்துவம் தொடர்பாகக் கற்பதற்காக அரச அதிகாரிகளுக்குப் பணம் செலுத்தி பாடநெறிகளைப் பயில்வதற்கான சந்தர்ப்பங்களை வழங்குதல்.

ஈ. மேலே அ, ஆ மற்றும் இ பந்திகளில் குறிப்பிட்டவாறு அவ் உத்தியோகத்தர்கள் பெற்றுக்கொண்ட தேர்ச்சி நிலை மற்றும் திறன் மதிப்பீட்டிற்காக பரீட்சைகளை நடாத்துதல்.

12. **முகாமைத்துவ சபை** பதவிநிலை கல்லூரியின் முகாமைத்துவம் மற்றும் நிர்வாக நடவடிக்கைகளிற்காக பின்வரும் அங்கத்தவர்கள் அடங்கிய முகாமைத்துவ சபைக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளதுடன் அச்சபை அரச பாதுகாப்பு அமைச்சரினால் நியமிக்கப்பட்டுள்ளது.

அ. பாதுகாப்பு அமைச்சுச் செயலாளர் - தலைவர்
ஆ. பிரதான பாதுகாப்பு உத்தியோகத்தர்
இ. முப்படைகளின் தளபதி
ஈ. இராணுவத் தளபதி
உ கடற்படைத் தளபதி
ஊ. வான் படைத் தளபதி
எ. பாதுகாப்பு அமைச்சின் மேலதிக செயலாளர் (பாதுகாப்பு அமைச்சின் செயளாலர் சமூகமளிக்காத விடத்து)
ஏ. கொதலாவல பாதுகாப்பு பல்கலைக்கழக உபவேந்தர்.
ஐ. திரைச்சேரியின் செயலாளர் அல்லது அவரின் பிரதிநிதி.
ஒ. பா.சே.க.ப.க கொமடான்ட்.
ஓ. பா.சே.க.ப.க பிரிகேடியர் தொடர்பாடல் (சபைச் செயலாளர்)

13. **முகாமைத்துவ சபைக் கூட்டம்** கல்லூரியின் பாடநெறியின் தரத்தை மேம்படுத்துவதற்காகவும் கல்லூரியின் அடிப்படை வசதிகளை மேம்படுத்தும் நோக்கிலும் முகாமைத்துவ சபைக் கூட்டம் கூட்டப்படுகின்றது. 2020 ஆம் ஆண்டின் போது மூன்று முகாமைத்துவ சபைக் கூட்டங்கள் நடாத்தப்பட்டன.

14. **கல்லூரியின் கல்விச்சபை** கல்லூரியின் கல்வி நடவடிக்கைகள் தொடர்பாகச் செயற்படுவதற்காக பின்வரும் அதிகாரிகள் அடங்கிய கல்விச்சபை நியமிக்கப்பட்டுள்ளது.

அ. பா.சே.க.ப கொமடான்ட் - தலைவர்.
ஆ. கொதலாவல பாதுகாப்பு பல்கலைக்கழக உபவேந்தரின் பிரதிநிதி.
இ. பா.சே.க.ப.க பிரிகேடியர் இணைப்பாளர்.
ஈ. இராணுவ பிரதான ஆலோசகர்.
உ. கடற்படை பிரதான ஆலோசகர்.
ஊ. வான்படை பிரதான ஆலோசகர்.
எ. பா.சே.க.ப.க பிரதான பதவிநிலை அதிகாரி 1 - செயலாளர்.

15. **கல்லூரியின் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவச் சபை** கல்லூரியின் கணக்குகள் மற்றும் நிதிசார் முகாமைத்துவ நடவடிக்கைகள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வு நடவடிக்கைகள் தொடர்பான மீளாய்விற்காக பின்வரும் குழுவினர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

அ. மேலதிகச் செயலாளர் பாதுகாப்பு அமைச்சு.
ஆ. பா.சே.க.ப.க கொமடான்ட்.

இ. பொதுத் திறைசேரியைப் பிரதிநிதித்துவப்படுத்தும் ஓர் உத்தியோகத்தர்.
ஈ. கணக்காய்வு அத்தியட்சகர் - கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்.
உ. பிரதம உள்ளகக் கணக்காய்வாளர் - பாதுகாப்பு அமைச்சு.
ஊ. பிரிகேடியர் தொடர்பாடல் - பா.சே.க.ப.க
எ. கர்னல் நிர்வாகம், லொஜிஸ்டிக் - பா.சே.க.ப.க.
ஏ. கணக்காளர் - பா.சே.க.ப.க.
ஒ. உள்ளக கணக்காளர் - பா.சே.க.ப.க.

பாடவிதானம்.

16. பாடநெறியானது 03 மாத ஆரம்பத் தவணைகளில் மொத்தம் 4 தவணைகளைக் கொண்டதாகும்.

17. **முதலாம் தவணை - அடிப்படைக் கல்வி (13 வாரங்கள்)** இது 2020 ஜனவரி 06 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டதுடன் 2019 ஏப்ரல் 11 ஆம் திகதி முடிவுற்றது. பின்வரும் பாடங்கள் முதலாம் கல்வித் தவணையின் போது பூரணப்படுத்தப்பட்டது.

அ. முப்படையினரின் வெவ்வேறு பிரிவினர்.
ஆ. யுத்தத்தில் உதவி புரியும் சேவைப்படையினர்.
இ. கட்டளையிடல், கட்டளையிடலில் உதவிபுரிதல் மற்றும் தீர்மானம் எடுத்தல்.
ஈ. யுத்த உபாயம், இராணுவ நடவடிக்கை மற்றும் யுத்தம்.
உ. புலனாய்வு மற்றும் பதவிநிலைக் கடமைகள்.
ஊ. பிரதான மற்றும் இராணுவப் படையணிச் செயற்பாட்டு வழங்கல் பதவிநிலைக் கடமைகள்.
எ. இராணுவப் படையணிச் செயற்பாட்டு வழங்கல் பதவிநிலைக் கடமைகள்.
ஏ யுத்த நடவடிக்கை படிமுறைகள்.
ஐ. ஆய்வு முறைமைகள்.
ஒ. இலங்கை பற்றிய ஆய்வு.

18. இரண்டாம் தவணை - யுத்த நடவடிக்கை செயற்பாடுகள் (16 வாரங்கள்) இது 2020 ஏப்ரல் 17 ஆம் திகதி முதல் 2020 ஜூலை மாதம் 31 ஆம் திகதி வரை நடாத்தப்பட்டது. இத் தவணையின் போது உள்ளடக்கப்பட்ட பாடங்களின் பிரிவுகள் பின்வருமாறாகும்.

அ. வான் போர் செய்யும் முறை.
ஆ. சர்வதேச தொடர்புகள்.
இ. சிவில் அதிகாரிகளுக்கு இராணுவ உதவி.
ஈ. யுத்த நடவடிக்கை படிமுறைகள்.
உ. தந்திரமுறைக் கல்வி.

19. மூன்றாம் தவணை - யுத்த நடவடிக்கைகளிற்கு மேலதிகமாக போர்ச் செயற்பாடுகள் (11 வாரங்கள்) இத் தவணை 2020 ஆகஸ்ட் 05 முதல் 2020 ஒக்டோபர் 15 வரை நடாத்தப்பட்டதுடன் பின்வரும் பாடப் பிரிவுகள் இதன் கீழ் உள்ளடக்கப்பட்டிருந்தன.

அ. சர்வதேச மனித உரிமைகள் சட்டம் பற்றிய பயிற்சிப் பட்டறை.
ஆ. சர்வதேச தொடர்புகள்.
இ. கூட்டு நடவடிக்கைகள்.
ஈ. முகாமைத்துவம்
உ. கடல் யுத்த முறைகள்
ஊ. தீவிரவாத பதில் தாக்கல் யுத்த நடவடிக்கைச் செயற்பாடுகள்.
எ. வெளிநாட்டு கல்விச் சுற்றுலா.
ஏ. தந்திரோபாயக் கல்வி.

20. நான்காம் தவணை - முகாமைத்துவம் மற்றும் தொழிநுட்பம். (07 வாரங்கள்) இத் தவணை 2020 ஒக்டோபர் 28 முதல் 2020 டிசெம்பர் 11 ஆம் திகதி வரை நடாத்தப்பட்டது. பின்வரும் பாடங்கள் இதில் உள்ளடக்கப்பட்டிருந்தன.

அ. முகாமைத்துவம்.
ஆ. யுத்த நுட்பங்கள்.
இ. ஐக்கிய நாடுகள் சபையின் சமாதானத்திற்கான செயற்பாடுகள்.
ஈ. யுத்த நடவடிக்கைகளுக்கான பயிற்சியளிப்பு
உ. பாதுகாப்பு.
ஊ. நிர்வாகக் கல்வி.
எ. அணு, உயிரியல் மற்றும் இரசாயனப் போர் நடவடிக்கைகள்.

பா.சே.க.ப.க பாடநெறி இல 14 நடைமுறைப்படுத்தல்.

21. பா.சே.க.ப. பாடநெறி 14 ஐப் பின்பற்றிய மாணவ அதிகாரிகளின் எண்ணிக்கை பின்வருமாறாகும்.

இராணுவம்	கடற் படை	விமானப் படை	வெளிநாட்டுப் படை	சிவில்	மொத்த தொகை
81	24	27	18	-	150

அட்டவணை – 1

22. பாடநெறியைப் பயின்ற வெளிநாட்டு மாணவ அதிகாரிகள் பின்வருமாறாகக் காணப்பட்டனர்.

அ. வங்காளதேசம் - 03
ஆ இந்தோனேசியா - 01
இ. மாலைதீவு - 01
ஈ. நேபாளம் - 02
உ பாகிஸ்தான - 02
ஊ. ருவான்டா - 01
எ சீனா - 03
ஏ. இந்தியா - 02
ஐ. சூடான் - 01
ஒ. ஓமான் - 01
ஓ சவுதி அரேபியா - 01

23. **பெறுபேறுகள்:** பா.சே.க.ப. பாடநெறி இல 14 இற்கு உரித்தான பெறுபேறுகள் வெயளியிடப்பட்டதுடன் அதன் சுருக்கம் பின்வருமாறாகும்.

ஆ:இ	பிரிவு	மாணவர்களின் எண்ணிக்கை	சித்தியெய்திய எண்ணிக்கை	சித்தியெய்தி இராதவர்களின் எண்ணிக்கை	தமது பிரிவிற்குத் திருப்பி அனுப்பப் பட்டவரகளின் எண்ணிக்கை	பாதுகாப்பு கற்கை தொடர்பான பட்டப் பின்படிப்பிற்காக தகைமை பெற்றவர்களின் எண்ணிக்கை
(அ)	(ஆ)	(இ)	(ஈ)	(உ)	(ஊ)	(எ)
1	இராணுவப் படை	81	81	-	-	65
2	கடற்படை	24	24	-	-	23
3	விமானப் படை	27	27	-	-	26
4	வெளிநாட்டு	18	18	-	-	13
5	மொத்தம்	**150**	**150**	**-**	**-**	**127**

அட்டவணை - 2

24. பாதுகாப்புச் சேவை கட்டளை மற்றும் பதவிநிலை கல்லூரியின் பாடநெறி இல. 14 இல் அனுமதிக்கப்பட்ட பாடநெறிப் பாடத்திட்டத்திற்கு அமைய நடாத்தப்படுகின்றது. முப்படையின் ஆலோசக உத்தியோகத்தர்கள் மற்றும் பயிற்சி பெற்ற விரிவுரையாளர்களால் பாடநெறி நடாத்தப்படுகின்றது. பாதுகாப்புச் சேவைகள் தொடர்பான பட்டப் பின்படிப்பு பாடநெறிக்கு உரிய கல்வி நடவடிக்கைகளிற்காக தகைமை பெற்ற கல்வியியலாளர்களால் விரிவுரைகள் நடாத்தப்படுகின்றன. இதற்கு மேலதிகமாக, மாணவ அதிகாரிகளின் அறிவை விரிவுபடுத்துவதற்காக அவர்களுக்குப் பல்வேறு முக்கியமான அரச மற்றும் தனியார் நிறுவகங்களிற்கும் வெளிநாட்டுச் சுற்றுலாக்களுக்கும் ஈடுபடுத்தப்படுகின்றனர்.

25. பா.சே.க.ப.க. பாடநெறி இல 14 இன் கல்வித் தவணைக்காலம் 4 ஐக்கொண்டிருந்ததுடன் இது பின்வரும் பயிற்சி செயற்பாடுகளைக் கொண்டிருந்தது.

அ. <u>பயிற்சிச் செயற்பாடுகள் (முதலாம் தவணையில் நடாத்தப்பட்ட பயிற்சிகள்)</u>

(1) இராணுவப் பயிற்சிப் பிரிவு

(அ) <u>"தண்டர் போல்ட்" பயிற்சி</u> இப் பயிற்சி 2020 ஜனவரி மாதம் 17 ஆம் திகதி கல்லூரி வளாகத்தில் நடாத்தப்பட்டதுடன் படையணித் தாக்குதலின் போது உதவித் தாக்குதல் வலுவை திட்டமிடுவது தொடர்பான அறிவை மாணவ அதிகாரிகளுக்கு வழங்கல்.



(ஆ) "ஹோல்ட் பாஸ்ட்" பயிற்சி இப் பயிற்சி 2019 ஜனவரி 20 ஆம் திகதி இராணுவ மாணவ அதிகாரிகளுக்கு கல்லூரி வளாகத்தில் நடாத்தப்பட்டதுடன் பாதுகாப்பு நடவடிக்கையில் பொறியியல் உதவி, படையணி/ படையணிப் பொறுப்பதிகார மட்டத்தில் திட்டமிடல் தொடர்பான அறிவை மாணவ அதிகாரிகளுக்கு வழங்குவதே இதன் நோக்கமாகும்.



(இ) "மாஸ்டர் ரைட்டர் பயிற்சி" இப் பயிற்சி 2020 ஜனவரி 22 ஆம் திகதி இராணுவ மாணவ அதிகாரிகளின் பங்கேற்பில் நடாத்தப்பட்டதுடன் இதன் மூலம் பல்வேறு உத்தியோகபூர்வ சேவைக் கடிதங்கள் எழுதுவது தொடர்பாக உள்ள சட்ட மற்றும் முறைமைகள் தொடர்பான சரியானதும் விரிவானதுமான பயிற்சி அவர்களுக்கு வழங்கப்பட்டது.



(ஈ) "டெக்டிகல் நோடேஷன்" பயிற்சி இப் பயிற்சியின் நோக்காக போர்ச் செயற்பாட்டின் போது போர்ச் செயற்பாட்டுச் சூழலில் கடமையாற்றும் பதவிநிலை உத்தியோகத்தரால் திடீரென ஏற்படும் நிலை ஒன்றை அறிந்து தாம் கட்டளையிடுபவர்களுக்கு அந் நிலை குறித்து போர்ச் செயற்பாட்டு அறிக்கை ஒன்றைத் தயாரித்து சமர்ப்பிப்பது தொடர்பான முன்மாதிரியை வழங்குவதாகும். இப் பயிற்சி 2020 ஜனவரி 29 ஆம் திகதி இராணுவ மாணவ அதிகாரிகளின் பங்கேற்பில் கல்லூரி வளாகத்தில் நடாத்தப்பட்டது.



(உ) "கெரவேன்" பயிற்சி இப் பயிற்சியின் மூலம் மாணவ அதிகாரிகளுக்கு தந்திரோபாயமான முறையில் போர்ச் செயற்பாடுகளிற்கு முன்னர் இராணுவ வாகனங்கள்

பயணிக்கு மற்றும் வாகன அணி தொடர்பான பதவிநிலைச் செயற்பாடுகள் மற்றும் திட்டமிடல் தொடர்பான அறிவை வழங்குவதே நோக்காகும். இப் பயிற்சி 2020 பெப்ரவரி 07 ஆம் திகதி இராணுவ மாணவ அதிகாரிகளால் கல்லூரி வளாகத்தில் நடாத்தப்பட்டது.



(ஊ) "பென்டோரா பொக்ஸ்" பயிற்சி இப் பயிற்சியின் நோக்காக ஒன்றிணைந்த ஓர் அறிக்கையைத் தயாரிப்பது தொடர்பான அறிவை வழங்கி ஒப்புவிப்புப் பயிற்சியை மேற்கொள்ளல். இப் பயிற்சி 2020 பெப்ரவரி 20 ஆம் திகதி இராணுவ மாணவ அதிகாரிகளுக்கு கல்லூரி வளாகத்தில் நடாத்தப்பட்டது.



(2) கடற்படைப் பயிற்சிப் பிரிவு

(அ) "ரவுண்ட் ரொபின்" பயிற்சி இப் பயிற்சி 2020 ஜனவரி 09 ஆம் திகதி கடற்படை மாணவ அதிகாரிகளுக்காக கல்லூரி வளாகத்தில் நடாத்தப்பட்டது. இப் பயிற்சியின் நோக்காக மாணவ அதிகாரிகளின் சிந்திக்கும் மற்றும் தீர்மானம் எடுக்கும் திறன், தன்னம்பிக்கை, தலைமைத்துவப் பண்புகள் மற்றும் இயலுமையை விருத்தி செய்தலும் பொது மக்களின் மத்தியில் தன்னம்பிக்கையுடன் தலைவராக உரையாற்றும் இயலுமையை விருத்தி செய்தலாகும்.



(ஆ) "வேபல் டி" பயிற்சி இப் பயிற்சி 2020 ஜனவரி மாதம் 17 ஆம் திகதி கல்லூரி வளாகத்தில் கடற்படை அதிகாரிகளால் நடாத்தப்பட்டது. இங்கு மாணவ அதிகாரிகளுக்கு உரையாற்றும் பயிற்சி நடாத்தப்பட்டது. இங்கு விடயத்திற்கு உரித்தாக உரையாற்றுவதன் மூலம் அவர்களுக்கு தமது ஞாபகங்கள் மற்றும் விடய

அறிவு கூட்டத்தின் மத்தியில் தெளிவாக சமர்ப்பிக்கும் திறனை விருத்தி செய்யும் நோக்கில் இப் பயிற்சி நடாத்தப்பட்டது.



(இ) "கிலர் வேல்" பயிற்சி இப் பயிற்சி 2020 ஜனவரி மாதம் 25 ஆம் திகதி கல்லோரி வளாகத்தில் கடற்படை மாணவ அதிகாரிகளால் நடாத்தப்பட்டது. இதன் போது வழங்கப்பட்ட நோக்கெல்லைக்குள் விடயங்கள் சேகரிக்கப்பட்டு தீர்மானம் எடுக்கப்பட்டு பரிந்துரைகள் வழங்கப்பட்டன. இவ்வாறு சேகரிக்கப்பட்ட விடயங்கள் மாணவ அதிகாரிகளால் எழுத்து மூலமாகவும் வாய்மொழி மூலமாகவும் சமர்ப்பிக்கப்படும். இங்கு மாணவ அதிகாரிகளின் நோக்கெல்லைக்குள் விடயங்கள் தொகுக்கும் திறன் மற்றும் முன்வைக்கும் திறன் விருத்தி செய்வது நோக்காகும்.



(3) விமானப்படைப் பயிற்சி பிரிவு

(அ) எழுந்தமான பேச்சு பயிற்சி இப் பயிற்சி 2020 ஜனவரி மாதம் 13 ஆம் திகதி விமானப்படை மாணவ அதிகாரிகளிற்காக கல்லோரியில் நடாத்தப்பட்டது. உடன் வழங்கப்படும் தலைப்பின் கீழ் தர்க்க ரீதியாகவும் அர்த்தம் உடையதாகவும் குறைந்த காலத்தில் பேசுவதற்கு பயிற்சி வழங்கப்படுவதே இதன் நோக்கமாகும்.



(ஆ) அறிவுசார் கதைப் பயிற்சி இது 2020 ஜனவரி மாதம் 27 ஆம் 29 ஆம் திகதி வரை விமானப்படை மாணவ அதிகாரிகளிற்காக கல்லோரி வளாகத்தில்

நடாத்தப்பட்டதுடன் அவர்களுக்கு வழங்கப்படும் ஏதேனும் தலைப்பின் கீழ் திட்டமிட்டு சரியாக முன்வைக்கும் இயலுமையை விருத்தி செய்தல் இதன் நோக்காகும்.



(இ) சுதாசியா பயிற்சி இப் பயிற்சி 2020 பெப்ரவரி மாதம் 26 ஆம் திகதி முதல் 2020 பெப்ரவரி மாதம் 29 ஆம் திகதி வரை விமானப்படை மாணவ அதிகாரிகளிற்காக கல்லூரி வளாகத்தில் நடாத்தப்பட்டது. இப் பயிற்சி தனிநபர் அப்பியாசப் பயிற்சி வழங்கும் நோக்கிலேயே வழங்கப்பட்டது. அங்கு ஏதேனும் தலைப்பு ஒன்றின் கீழ் சரியாக விபரங்கள் தொகுக்கப்பட்டு இதனைத் திறன்பட சமர்ப்பிக்கும் இயலுமையை வளர்த்தலே நோக்காகும்.



(ஈ) "தண்டர் ஸ்ரயிக்" பயிற்சி இப் பயிற்சி 2020 மார்ச் மாதம் 02 ஆம் திகதி முதல் 04 ஆம் திகதி வரை விமானப்படை மாணவ அதிகாரிகளிற்காக நடாத்தப்பட்டதுடன் இதன் நோக்காக மாணவ அதிகாரிகளால் போர் நடவடிக்கைகளின் போது வான் பலத்தை பௌதீக ரீதியாகப் பயன்படுத்தும் இயலுமைகளை மெருகூட்டுவதற்கான பயிற்சி அளித்தலாகும்.



(உ) வான் தாக்குதல் பயிற்சி இது 2020 மார்ச் மாதம் 06 ஆம் 07 ஆம் திகதிகளின் போது விமானப்படை மாணவ அதிகாரிகளிற்காக கல்லூரி வளாகத்தில் நடாத்தப்பட்டது. இங்கு வழங்கப்பட்ட வான் தாக்குதல் இராணுவப் பயிற்சியின் போது மாணவர்களுக்கிடையே நிலவும் தனியாள் திறன் தனித்தனியாக அளவிட்டுப் பார்க்கக் கூடியவகையிலும் பயிற்றுவிக்கும் பயிற்சியாகவும் நடாத்தப்பட்டது.



(4) முப்படைகளின் ஒன்றினைந்த பயிற்சி

(அ) வட்ட மேசைப் பயிற்சி இப் பயிற்சி 2020 பெப்ரவரி மாதம் 13 ஆம் திகதி சகல மாணவ அதிகாரிகளிற்காகவும் கல்லூரி வளாகத்தில் நடாத்தப்பட்டது. இப் பயிற்சியின் மூலம் கலந்துரையாடல் குறிப்புகள் எழுதும் ஆற்றலை விருத்தி செய்வதே நோக்காகும்.



(ஆ) "டியுடோரியல் எஸ்டிமேட்" பயிற்சி இப் பயிற்சி 2020 மார்ச் மாதம் 19 ஆம் திகதி முதல் 2020 மார்ச் மாதம் 26 ஆம் திகதி வரை கல்லூரி வளாகத்தில் இராணுவ மற்றும் கடற் படை மாணவ அதிகாரிகளிற்காக நடாத்தப்பட்டது. இப் பயிற்சியின் நோக்கம் பின்வருமாறாகக் காணப்பட்டது.

i. யுத்த நடவடிக்கைகளுக்காக யுத்த மதிப்பீடுகளைத் தயாரித்து இதற்காக புலனாய்வுச் செய்திகளைத் திரட்டுதல் மற்றும் அப்புலனாய்வுச் செய்திகளிற்கு அமைவாக திட்டங்களை வகுக்கும் செயற்பாடு தொடர்பான அறிவை வழங்குதல்.

ii. படைச் சேனை மட்டத்தில் யுத்தப் பயிற்சிகளிற்காக யுத்த மதிப்பீட்டைத் தயாரிக்கும் நுட்ப முறை மற்றும் இது தொடர்பான பதவிநிலை அறிவை வழங்கி இதனைப் பௌதீக ரீதியாகப் பயன்படுத்துவதற்குத் தேவையான விரிவான அறிவை வழங்குவதும் ஆகும்.



ஆ. இரண்டாம் தவணையில் வழங்கப்பட்ட பயிற்சி

(1) இராணுவப் பயிற்சிப் பிரிவு

(அ) **"பிராஸ் டெக்" பயிற்சி** இப் பயிற்சி கம்பஹா அஸ்கிரி ரஜமஹா விகாரைப் பகுதியில் 2020 ஏப்ரல் 20 ஆம் திகதி முதல் 2020 ஏப்ரல் மாதம் 24 ஆம் திகதி வரை நடாத்தப்பட்டது. இங்கு படையணி.ஃ. அதிகாரப்படையணி மட்டத்தில் பாதுகாப்பாக நிலைபெறுவது தொடர்பாக திட்டமிடல் தொடர்பான பயிற்சி வழங்குவதே நோக்காகும்.



(ஆ) "சய்நிங் ஆமர்" பயிற்சி இப் பயிற்சி 2020 ஏப்ரல் மாதம் 25 ஆம் திகதி கல்லோரி வளாகத்தில் இராணுவ மாணவ அதிகாரிகளிற்காக நடாத்தப்பட்டது. இப் பயிற்சியின் நோக்காக யுத்த களத்தில் வழங்கும் கட்டளைகள் தொடர்பாக பயிற்சி வழங்குதலாகும்.



(இ) "அபர் கட்" பயிற்சி இப் பயிற்சி 2020 மே 09 ஆம் திகதி முதல் 2020 மே 15 ஆம் திகதி வரை இராணுவ மாணவ அதிகாரிகளிற்காக நாரம்மல பிரதேசத்தில் நடாத்தப்பட்டது. இதன் நோக்கு அதிகாரப் படையணி மட்டத்தில் தாக்குதல் ரீதியான யுத்தக் கள திட்டமிடற் பயிற்சிகளை வழங்குவதாகும்.



(ஈ) "கெரியர் பிஜன்" பயிற்சி இப் பயிற்சி 2020 ஜூலை மாதம் 17 ஆம் திகதி முதல் 2020 ஜூலை மாதம் 24 ஆம் திகதி வரை கல்லூரி வளாகத்தில் விமானப்படை மாணவ அதிகாரிகளிற்காக நடாத்தப்பட்டது. இதன் நோக்கம் யுத்த தர்மத்தின் கீழ் படைச் சேனை மட்டத்தில் தாக்குதல் மற்றும் பாதுகாப்பான போர்ச் செயற்பாட்டு நடவடிக்கைகளின் மூலம் தந்திரோபாயமான போர் நடவடிக்கைகள் குறித்த அறிவை வழங்குவதாகும்.



(2) கடற்படைப் பயிற்சிப் பிரிவு

(அ) ஹார்ட் பன்ச் பயிற்சி 2020 ஏப்ரல் மாதம் 22 ஆம் திகதி முதல் 23 ஆம் திகதி வரை கடற்படை மாணவ அதிகாரிகளுக்கு இப் பயிற்சி கல்லூரி வளாகத்தில் நடாத்தப்பட்டது. இதன் நோக்கம், கடற்படை மாணவ அதிகாரிகளுக்கு கடற்படை உதவி தாக்குதல் புரியவும் திட்டங்கள் மற்றும் இது தொடர்பாக ஈடுபடுத்தப்படக் கூடிய புதிய நடைமுறைகள் தொடர்பான அறிவை வழங்குவதாகும்.



(ஆ) யுலயிஸிஸ் பயிற்சி இப் பயிற்சி 2020 மே மாதம் 02 ஆம் திகதி முதல் மே 04 ஆம் திகதி வரை கடற்படை மாணவ அதிகாரிகளிற்காக கல்லூரி வளாகத்தில் நடாத்தப்பட்டதுடன் அதன் நோக்கம் யுத்தக்களத் திட்டச் செயற்பாட்டின் போது பகுத்தறிவின் முக்கியத்துவம் தொடர்பாக அவர்களுக்கு எடுத்துக்கூறுவதாகும்.



(இ) "தண்டர் ஸ்ரயிக்" பயிற்சி இப் பயிற்சி 2020 ஜூலை மாதம் 24 ஆம் திகதி கடற்படை மாணவ அதிகாரிகளிற்காக கல்லூரி வளாகத்தில் நடாத்தப்பட்டது. இப்

பயிற்சியின் நோக்கம் கடற்படை மாணவ அதிகாரிகளின் தொழிநுட்ப அறிவு மற்றும் கடற்படை போர்த் தந்திரங்கள் தொடர்பான அறிவை மேம்படுத்துவதாகும்.



(ஈ) "கொன்டிகி" பயிற்சி இது 2020 ஜூலை மாதம் 18 ஆம் திகதி முதல் 22 ஆம் திகதி வரை கடற்படை மாணவ அதிகாரிகளிற்காக கிதுல்கல முதல் கொஸ்கம வரையான பகுதியில் களனி கங்கைக்கு அருகாமையில் நடாத்தப்பட்டது. இப் பயிற்சி மாணவர்களிற்கிடையே தலைமைத்துவத் திறனை விருத்திசெய்தலுக்காகவும் ஆக்கத்திறனையும் தொழிற்திறனை ஏற்படுத்துவதற்காகவும் பௌதீக ரீதியான சவால்மிக்க செயற்பாடுகளின் மூலம் அவர்களது தன்னம்பிக்கையை மேம்படுத்தும் நோக்குடனாகும்.



(3) ஒன்றிணைந்த <u>பயிற்சி</u>

(அ) "ஒக்டோபஸ்" பயிற்சி இது 2020 மே மாதம் 15 ஆம் திகதி முதல் 2020 மே மாதம் 17 ஆம் திகதி வரை கடற்படை மற்றும் விமானப்படை மாணவ அதிகாரிகளிற்காக கல்லூரி வளாகத்தில் நடாத்தப்பட்டது. இப் பயிற்சியின் நோக்கம், கடல் மற்றும் விமானப் போர் நடவடிக்கைகளைத் திட்டமிட்டு செயற்பாட்டிற்குக் கொண்டுவருதல் தொடர்பான பயிற்சி வழங்குவதாகும்.



(ஆ) "கொன்கிரீட் ஜங்கல்" பயிற்சி இது 2020 மே மாதம் 22 ஆம் திகதி முதல் 2020 மே மாதம் 29 ஆம் திகதி வரை இராணுவ மற்றும் விமானப்படை மாணவ அதிகாரிகளிற்காக குருநாகல் அதுகல பிரதேசத்தில் நடாத்தப்பட்டது. இப் பயிற்சியின்

நோக்கம், நகரப்புறச் சூழலில் தாக்குதல் மற்றும் பாதுகாப்புச் செயற்பாட்டுப் படையணி மட்டத்தில் திட்டமிடல் தொடர்பான அறிவை வழங்குவதாகும்.



(இ) "கோல்டன் கில்ட்" பயிற்சி இது 2020 யூன் 01 ஆம் திகதி முதல் 2020 யூன் மாதம் 08 ஆம் திகதி வரை முப்படை மாணவ அதிகாரிகளிற்காக கலேவல, தம்புல்ல, மற்றும் நாவுல பிரதேசத்தில் நடாத்தப்பட்டது. இப் பயிற்சியின் நோக்கம், படையணி மற்றும் அதிகாரப்படையணி மட்டத்தில் பாதுகாப்புச் செயற்பாடுகளின் போது தீர்மானம் எடுக்கும் இயலுமை மற்றும் வான் பலத்தைப் பயன்படுத்தல் தொடர்பான பயிற்சி ஒன்றை மாணவ அதிகாரிகளுக்கு வழங்குவதாகும்.



(ஈ) "செடோ டான்ஸ்" பயிற்சி இப் பயிற்சி 2020 ஜூன் மாதம் 10 ஆம் திகதி முதல் 2020 ஜூலை மாதம் 03 ஆம் திகதி வரை இராணுவ, விமானப்படை மற்றும் கடற்படை மாணவ அதிகாரிகளிற்காக கல்லூரி வளாகத்தில் நடாத்தப்பட்டது. இதன் நோக்கம், யுத்த திட்டமிடலை பரிசீலனை செய்யும் வழிமுறைகள் (War Games) மூலம் திட்டங்களை உறுதிப்படுத்திக்கொள்ளல் மற்றும் படையணி மட்டத்தில் ஒன்றினைந்த நடவடிக்கைகளை திட்டமிடலைப் பயிற்றுவிப்பதாகும்.



(உ) 'பேப்பல் டர்டல்' பயிற்சி இப் பயிற்சி 2020 ஜூலை 29 முதல் 2020 ஆகஸ்ட் 02 வரையான காலப்பகுதியின் போது முப்படை மாணவ அதிகாரிகளின் பங்கேற்பில் கல்லூரியில் நடாத்தப்பட்டது. கடலிலும் தரையிலும் செல்லும் இரு வழிகளின் செயற்பாடுகளிற்காக பயிற்சி ஒன்று வழங்குவதே இதன் நோக்காகும்.



இ. மூன்றாம் தவணையில் நடாத்தப்பட்ட பயிற்சிகள்

(1) இராணுவ பயிற்சிப் பிரிவு

(அ) 'இன்க் பிலொட்' பயிற்சி 2020 செப்தெம்பர் மாதம் 07 ஆம் திகதி முதல் 2020 செப்தெம்பர் 11 ஆம் திகதி வரை இராணுவ மாணவ அதிகாரிகளிற்காக கல்லூரி வளாகத்தில் நடாத்தப்பட்டது. இதன் நோக்கம் படையணி மட்டத்தில் எதிர்த்தீவிரவாத செயற்பாடுகளுக்காக படையினரை ஈடுபடுத்தும் திட்டங்களைத் தயாரிப்பது தொடர்பான அறிவை வழங்குவதாகும்.



(2) கடற்படைப் பயிற்சிப் பிரிவு

(அ) சலமென்டர் பயிற்சி இப் பயிற்சி 2020 செப்தெம்பர் மாதம் 22 ஆம் திகதி முதல் செப்தெம்பர் 23 ஆம் திகதி வரை கடற்படை மாணவ அதிகாரிகளால் கல்லூரி வளாகத்தில் நடாத்தப்பட்டதுடன் மாணவ அதிகாரிகளிற்காக ஒன்றிணைந்த இராணுவத் திட்டமிடலுக்காக பயிற்சி வழங்கப்பட்டது.



(ஆ) 'ட்ரய்டன்ட்' பயிற்சி இது 2020 செப்தெம்பர் மாதம் 06 ஆம் திகதி முதல் 09 ஆம் திகதி வரை கடற்படை மாணவ அதிகாரிகளிற்காக திருகோணமலை

கடற்படைத் தலைமையகத்தில் நடாத்தப்பட்டது. இதன் நோக்கம் யுத்தகளத திட்டமிடல் தொடர்பான பயிற்சியை வழங்குதல் ஆகும்.



(இ) "மார்லின் ஸ்பைக்" பயிற்சி இப் பயிற்சி 2020 செப்தெம்பர் மாதம் 26 ஆம் திகதி கடற்படை மாணவ அதிகாரிகளுக்காக கல்லூரி வளாகத்தில் நடாத்தப்பட்டது. இப் பயிற்சி கிளர்ச்சிகள்/ வன்முறைகள் போன்ற திடீர் அனர்த்த நிலைகளின் போது கடற்படை, கடற் போர்ச் செயற்பாடுகளை மேற்கொள்ள வேண்டிய விதம் தொடர்பில் மாணவ அதிகாரிகளுக்கு விளக்கத்தை ஏற்படுத்துவதற்காக விசேடமாக மேற்கொள்ளப்பட்டுள்ளது.



(ஈ) "மென் ஒப் வோ" பயிற்சி இப் பயிற்சி 2020 ஒக்டோபர் மாதம் 08 ஆம் திகதி கடற்படை மாணவ அதிகாரிகளிற்காக கல்லூரி வளாகத்தில் நடாத்தப்பட்டது. இப் பயிற்சியின் நோக்கம் கடற் போர்ச் செயற்பாடுகளைத் திட்டமிடும் செயற்பாட்டிற்குத் தேவையான பதவிநிலை அறிவை மேம்படுத்துவதாகும்.



(உ) "புருடன்ட்" பயிற்சி இப் பயிற்சி 2020 செப்தெம்பர் மாதம் 26 ஆம் திகதி கடற்படை மாணவ அதிகாரிகளிற்கான கடற்படை தந்திரோபாயக் கருப்பொருளிற்கு இணைவாக மாணவ அதிகாரிகளால் எதிர்கால இலங்கை கடற் படைக்கு ஏற்ற கப்பல் ஒன்றின் மாதிரியை பரிந்துரைப்பு மேற்கொள்ளப்பட்டது.



(3) விமானப்டைப் பயிற்சிப் பிரிவு

(அ) **ரொக் எப்ஸ் பயிற்சி** இப் பயிற்சி 2020 செப்தெம்பர் மாதம் 24 ஆம் திகதி முதல் 2020 செப்தெம்பர் மாதம் 27 திகதி வரையான காலப்பகுதியின் போது விமானப்படை மாணவ அதிகாரிகளின் பங்கேற்பில் நடாத்தப்பட்டதுடன் கடற்படைச் சீனன்குடா துறைமுகப் பயிற்சி முகாமிற்குச் சென்று அங்கும் இப் பயிற்சி பௌதீக ரீதியாகப் பயின்றதுடன் இதன் நோக்கம் முகாம் பாதுகாப்பு கட்டளைகள் திட்டமிடல் தொடர்பான நியாயபூர்வமாகவும் பௌதீக ரீதியாகவும் பயிற்சியை வழங்குவதாகும்.



(4) ஒன்றிணைந்த பயிற்சி

(அ) "ஸ்லெஜ் ஹெமர்" பயிற்சி இப் பயிற்சி 2020 செப்தெம்பர் மாதம் 24 ஆம் திகதி முதல் 2020 செப்தெம்பர் மாதம் 30 ஆம் திகதி வரை இராணுவ, விமானப்படை மாணவ அதிகாரிகளால் ஒன்றிணைந்து கல்லாரியில் நடாத்தப்பட்டது. இப் பயிற்சியின் மூலம், போர்க்கள இராணுவத் திட்டமிடல் மற்றும் நடைமுறைப்படுத்தல் தொடர்பான பயிற்சி வழங்கப்படுவதுடன் இதன் மூலம் பின்வரும் பயிற்சி/ கற்கை வழங்கப்படுகின்றது.

i. போர்க்கள் தந்திரோபாய மட்டத்தில் பதில்தீவிரவாத போர்ச் செயற்பாடுகளின் செயற்பாட்டு நடவடிக்கைகளின் பயிற்சி.

ii. பதில்தீவிரவாத செயற்பாட்டு நடவடிக்கைகளிற்காக பாதுகாப்புப் போர்த் திட்டங்கள் தொடர்பான கற்கை.

iii. போர்ப் பயிற்சிச் செயற்பாட்டுப் பயிற்சியின் மூலம் கல்விபுகட்டுதல்.



ஈ. நான்காம் தவணையில் நடாத்தப்பட்ட பயிற்சி

(1) இராணுவப் பயிற்சிப் பிரிவு

(அ) "கயிடிங் லயிட்" பயிற்சி இது 2020 நவம்பர் மாதம் 05 ஆம் திகதி முதல் 2020 நவம்பர் மாதம் 06 வரை கல்லூரி வளாகத்தில் நடாத்தப்பட்டதுடன் இராணுவப் பயிற்சிக் கொள்கைகளிற்கு இணங்க படையணிப் பயிற்சி விரிவுரையாளர் ஒருவராகச் செயற்படுவதற்கான பயிற்சி ஒன்று வழங்கப்படுவதே இப் பயிற்சியின் நோக்காகும்.



(ஆ) "கோஸ்ட் வோக்" பயிற்சி இப் பயிற்சி 2020 நவம்பர் மாதம் 14 ஆம் திகதி வெலிவேரிய, பூகொட கிரிந்திவெல போன்ற பகுதிகளில் இராணுவ மாணவ அதிகாரிகளால் நடாத்தப்பட்டது. போர் வழிமுறைகள் தொடர்பாக படையணி இன்றி எழுத்து மூலமாக அதிகார அணி மட்டத்தில் மேற்கொள்ளப்படும் போர்ப் பயிற்சியாவதுடன் இது போர்த் தர்மங்களின் அடிப்படையில் ஸ்தாபிக்கப்பட்டுள்ள அதிகாரப் படையணி மட்டத்தில் மேற்கொள்ளப்படும் பயிற்சியாகும்.



(2) கடற்படைப் பயற்சிப் பிரிவு

(அ) "ஸீ லயன்" பயற்சி 2020 ஒக்டோபர் மாதம் 23 ஆம் திகதி கல்லூரி வளாகத்தில் இப் பயிற்சி நடாத்தப்பட்டதுடன் கடற்போர்ச் செயற்பாட்டுப் பணிகள் தொடர்பிலான தற்போதைய மற்றும் எதிர்கால போர்ச் செயற்பாடுகளின் முக்கிய கோட்பாடுகள், கொள்கைகள் மற்றும் சிக்கல்கள் தொடர்பிலான கற்பித்தல் இதன் மூலம் எதிர்பார்க்கப்படுகின்றது.



(3) ஒன்றிணைந்த பயிற்சி

(அ) "மெக்னம் போஸ்" போர்ப் பயிற்சி இது 2020 ஆகஸ்ட் மாதம் 28 ஆம் திகதி கல்லாரி வளாகத்தில் நடாத்தப்பட்டதுடன் இது பதவிநிலை இராணுவ தந்திரோபாயச் செயற்பாடுகளின் பதவிநிலை உத்தியோகத்தர், முறையான தீர்மானம் எடுத்தல் மற்றும் பல்வேறு திட்டங்களைச் செயற்படுத்துவதற்கான பயிற்சி ஒன்றை வழங்குவதை நோக்காகக் கொண்டு மேற்கொள்ளப்பட்டது.



(ஆ) குருசிபல் பயிற்சி 2020 நவம்பர் மாதம் 09 ஆம் திகதி முதல் 13 ஆம் திகதி வரை முப்படை மாணவ அதிகாரிகளின் பங்கேற்பில் கல்லாரி வளாகத்தில் நடாத்தப்பட்டது. திடீரென பொது மக்களின் தேவைப்பாடுகள் மற்றும் உள்ளகச் செயற்பாடுகளிற்காக முப்படை கோரப்படுவதற்காக ஒருங்கிணைந்த பயிற்சி ஒன்றை வழங்குவதே இதன் நோக்காகும்.



(உ) "ரெட் இங்க் கெரெக்ஷன்" (தவணை 1) பரீட்சை இப் பரீட்சை இராணுவ, கப்பல் மற்றும் விமானப் படைப் பிரிவின் கீழ் மேற்கொள்ளப்பட்டதுடன் ஒவ்வொரு கல்வித் தவணையின் போதும் அத் தவணையில் கற்றறிந்த பாடங்களிற்கு அமைவாக எழுத்து மூலமாகவும் கணனியின் மூலமாகவும் பரீட்சை ஒன்றை நடாத்துவதேயாகும். முப்படையினர்களுக்கும் அவர்களது கற்பித்தலின் இருதியில் நடாத்தப்படும் எழுத்துருவிலான பரீட்சையாகும்.

(1) இராணுவப் பயிற்சிப் பிரிவு

(அ) "மாஸ்டர் ரைடர்" 2 பயிற்சி 2020 பெப்ரவரி மாதம் 05 ஆம் திகதி நடாத்தப்பட்டது.
(ஆ) "ரவுன்ட் டேபல" பயிற்சி - 2020 பெப்ரவரி மாதம் 13 ஆம் திகதி நடாத்தப்பட்டது.

(2) கடற்படைப் பயிற்சிப் பிரிவு

(அ) "மாஸ்டர் ரைடர்" 2 பயிற்சி 2020 பெப்ரவரி மாதம் 05 ஆம் திகதி நடாத்தப்பட்டது.
(ஆ) "ரவுன்ட் டேபில்" பயிற்சி - 2020 மார்ச் 13 ஆம் திகதி நடாத்தப்பட்டது.

(இ) ஐஎம்எல் பயிற்சி 2020 மார்ச் 18 ஆம் திகதி நடாத்தப்பட்டது.

(3) விமானப்படைப் பயிற்சிப் பிரிவு

(அ) "மாஸ்டர் ரைடர்" 2 பயிற்சி 2020 பெப்ரவரி மாதம் 05 ஆம் திகதி நடாத்தப்பட்டது.
(ஆ) "ரவுன்ட் டேபில்" பயிற்சி - 2020 மார்ச் 13 ஆம் திகதி நடாத்தப்பட்டது.
(இ) லயிட்னிங் ஸ்ரயிக் பயிற்சி - 2020 மார்ச் மாதம் 18 ஆம் 19 ஆம் திகதிகளில் நடாத்தப்பட்டது.

(ஊ) "ரெட் இங்க் கெரெக்ஷன்" (தவணை 2) பரீட்சை

(1) இராணுவப் பயிற்சிப் பிரிவு

(அ) "அபர் கட்" பயிற்சி 2020 மே 16 ஆம் திகதி நடாத்தப்பட்டது.
(ஆ) "கோல்டன் பீல்ட" பயிற்சி 2020 ஜூன் மாதம் 10 ஆம் திகதி நடாத்தப்பட்டது.
(இ) "ஷெடோ டான்ஸ்" பயிற்சி 2020 ஜூலை மாதம் 11 ஆம் திகதி நடாத்தப்பட்டது.

(2) கடற்படைப் பயிற்சிப் பிரிவு

(அ) "ஸ்மோக்" ஸ்ரேக் பயிற்சி 2020 ஏப்ரல் மாதம் 25 ஆம் திகதி நடாத்தப்பட்டது.
(ஆ) "யுலிசிஸ்" படைத்தளப் பயிற்சி 2020 மே மாதம் 21 ஆம் திகதி நடாத்தப்பட்டது.

(3) விமானப்படைப் பயிற்சிப் பிரிவு

(அ) "தண்டு மொனரா" பயிற்சி 2020 மே மாதம் 05 ஆம் திகதி நடாத்தப்பட்டது.
(ஆ) "கோல்டன் பீல்ட்" பயிற்சி 2020 ஜூன் மாதம் 10 ஆம் திகதி நடாத்தப்பட்டது.
(இ) "ட்ரெகன் ப்லய" பயிற்சி 2020 ஜூலை மாதம் 17 மற்றும் 18 ஆம் திகதிகளில் நடாத்தப்பட்டது.

(எ) "ரெட் இங்க் கெரெக்ஷன்" (தவணை 3) பரீட்சை

(1) இராணுவப் பயிற்சிப் பிரிவு

(அ) "ஸ்லேஜ் ஹெமர" பயிற்சி 2020 ஒக்டோபர் மாதம் 02 ஆம் திகதி நடாத்தப்பட்டது.

(2) கடற்படைப் பயிற்சிப் பிரிவு

(அ) "ட்ரைடன்ட்" பயிற்சி 2020 செப்தெம்பர் மாதம் 08 ஆம் திகதி நடாத்தப்பட்டது.
(ஆ) "மார்லின்ஸ்பைக்" பயிற்சி 2020 ஒக்டோபர் மாதம் 02 ஆம் திகதி நடாத்தப்பட்டது.

(3) விமானப்படைப் பயிற்சிப் பிரிவு

(அ) "அல்பரோஸ்" பயிற்சி 2020 செப்தெம்பர் மாதம் 07 ஆம் திகதி நடாத்தப்பட்டது.
(ஆ) "எயார் டிடரன்ஸ்" பயிற்சி 2020 ஒக்டோபர் மாதம் 02 ஆம் திகதி நடாத்தப்பட்டது.

ஏ. "ரெட் இங்க் கெரெக்ஷன்" பரீட்சை (தவணை 4)

(1) தரை, கடல், விமானப் படையினர் பயிற்சிப் பிரிவு

(அ) "கைடிங் லயிட்" பயிற்சி 2020 நவம்பர் மாதம் 22 ஆம் திகதி முதல் 25 ஆம் திகதி வரை நடாத்தப்பட்டது.
(ஆ) "வைவா வொயிஸ்" பயிற்சி 2020 நவம்பர் மாதம் 24 ஆம் திகதி முதல் 28 ஆம் திகதி வரை நடாத்தப்பட்டது.

26. சகல மாணவ அதிகாரிகளுக்காகவும் பாதுகாப்புப் பட்டப் படிப்புப் பாடநெறியின் கற்கைப் பாடங்களுக்காக பின்வரும் பரீட்சைகள் நடாத்தப்பட்டன.

அ. இரண்டாம் தவணை

(1) இலங்கை வரலாறு, சர்வதேச விவகார பாடத்திற்கான பரீட்சை 2020 ஏப்ரல் மாதம் 20 ஆம் திகதியும் ஜூன் மாதம் 01 ஆம் திகதியும் நடாத்தப்பட்டது.

ஆ. மூன்றாம் தவணை

(2) தந்திரோபாய கற்கைப் பரீட்சை 2020 செப்தெம்பர் மாதம் 18 ஆம் திகதி நடாத்தப்பட்டது.

இ. நான்காம் தவணை

(3) முகாமைத்துவக் கற்கைப் பரீட்சை 2020 ஒக்டோபர் மாதம் 29 ஆம் திகதி நடாத்தப்பட்டது.

27. முன்வைத்தல் பாடநெறி இலக்கம் 14 மாணவ அதிகாரிகளினால் பாடநெறிக் காலத்தின் போது பின்வரும் தலைப்புகளின் கீழ் சமர்ப்பணங்கள் மேற்கொள்ளப்பட்டன.

அ. முதலாம் தவணை

(1) **போர்த் தலைவரின் தலைமைத்துவம் மற்றும் கட்டளை தொடர்பாகக் கற்றறிந்து சமர்ப்பித்தல் (இராணுவப் பயிற்சிப் பிரிவு)** பின்வரும் கௌரவ இராணுவப் படை அதிகாரிகளின் சுயசரிதைக் கற்கைகள் மாணவ அதிகாரிகளால் சமர்ப்பித்தல்.

(அ) ஜெனரல் ஜோர்ஜ் எஸ் பெடோன்
(ஆ) பெனிடோ முசோலினி
(இ) மேஜர் ஜெனரல் அரில் ஷெரோன்
(ஈ) ஜெனரல் ஜோர்ஜ் சீ மார்ஷல்
(உ) ஜெனரல் மென்சிம் வெகன்ட்
(ஊ) பீல்ட் மார்ஷல் எரிக் வொன் பென்ஸ்டெயின்
(எ) நெபோலியன் பொனபார்ட்
(ஏ) ஜோர்ஜ் ஸ்டார்லின்
(ஐ) அடொல்ப் ஹிட்லர்

(ஒ) ஜெனரல் டொமொயிகி யமாஷிடா
(ஓ) பீல்ட் மார்ஷல் விலியம் சிலிம்
(ஔ) ஜெனரல் மெதிவ் பீ ரிஜ்வே
(க) ஜெனரல் பேர்வீஸ் முஷ்ராப்
(கா) சேர். வின்ஸ்டன் சேர்சில்
(கி) பீல்ட் மார்சல் கே எம் கரிஅப்பா

ஆ. இரண்டாம் தவணை

(1) **போர் தொடர்பான கற்கைகள் சமர்ப்பித்தல் போர்ப் பிரிவு** பின்வரும் போர் களக் கற்கைகள் மாணவ அதிகாரிகளால் சமர்ப்பிக்கப்பட்டன.

(அ) ஐஏ டிராங்க் பள்ளத்தாக்குப் போர் : 1965 நவம்பர்
(ஆ) "நோர்மன்ட்" தரையிறக்கம்
(இ) ஈ 1 "அலமைன்" இரண்டாம் போர்
(ஈ) "ஸ்டாலின்கிரேட்" போர் (1942 – 1943 பெப்ரவரி)
(உ) "ஜட்லன்ட்" போர் (1916)
(ஊ) "ஒகினாவா" போர்
(எ) "கொசேவோ" போரின் போது நேடோ இராணுவத்தினரால் வான் பலத்தைப் பயன்படுத்தல் (1999)
(ஏ) "மோல் கிரிகட் போர்க்களம் 19 (1982)
(ஐ) ஆறு நாள் யுத்தம் (1967 ஜூன் 05 – 1967 ஜூன் 10)
(ஒ). "செடான்" போர் (1040 மே)
(ஓ) கொரியா போர் (1950 ஜூன் 25 – 1991 பெப்ரவரி 28)
(ஔ) முதலாம் கல்ப் போர் (1990 ஆகஸ்ட் 02 – 1991 பெப்ரவரி 28)
(க) "இன்ஷொன்" தரையிறக்கம்
(கா) பிரித்தானியப் போர் (1940)

இ. மூன்றாம் தவணை

(1) **சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த சம்பவங்கள் தொடர்பான கற்கையைச் சமர்ப்பித்தல் (ஒன்றிணைந்த) இங்கு** பின்வரும் தலைப்புகளின் கீழ் கற்கைகளை மேற்கொண்டு சமர்ப்பணங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

அ. இராக்கியப் போர் (2003 – 2006)
ஆ. "பஜரான்ட் சிவில்" போர் (1993 – 2005)
இ. சைபிரஸ் போர் (1954 – 1959)
ஈ. வியட்னாம் போர் (இரண்டாம் இந்திய சீனப் போர் 1955 – 1975)
உ. "மோல்டோவா" இல் "டரான்ஸ்னிஸ்ரியா போர் (1990 – 1992)
ஊ. கிழக்கு ரிமோரயக் கிளர்ச்சி (2006)
எ. எல்சல்வடோர் இல் பதில் கிளர்ச்சி 1979 - 1992
ஏ. அல்ஜீரிய கிளர்ச்சி : 1954 - 1962
ஐ. அப்கானிஸ்தான் சிவில் போர்: 1992 - 1996
ஒ. மொஷ்டிராக் தாக்குதல்
ஓ. மெலயன் திடீர் தாக்குதல் : 1948 - 1960
ஔ. நிகரகுவா கிளர்ச்சி : 1978 – 1990
க. தென் லெபனான் பலஸ்தீனியக் கிளர்ச்சி 1968 – 1982
கா. குரிஸ்டெரோ போர்
கி. இந்திய மாக்சிசவாதிக் கிளர்ச்சி (1967 முதல் இது வரை)
கீ. சிரிய சிவில் போர் (2011 முதல் இது வரை)

கு. அங்கோலிய சிவில் போர் : 1975 – 2002
கூ. சீனக் கிளர்ச்சி (1949)
கெ. ஸ்பானிய சிவில் போர் : 1936 – 1939
கே. லிபியக் கிளர்ச்சி (2011 முதல் இது வரை)
கை. உகன்டா டெசோ கிளர்ச்சி : 1986 - 1993

ஈ. நான்காம் தவணை

(1) **இலங்கையில இடம்பெற்ற போர் தொடர்பான சமர்ப்பணங்கள்**

(அ) வெலிஓய பாதுகாப்புத் தாக்குதல் (1991)
(ஆ) சாம்பூர் போர் (2006)
(இ) யாழ்தேவித் தாக்குதல் (1995)
(ஈ) ரிவிரெஸ ஐ தாக்குதல் (1995)
(உ) தொப்பிகலவைக் கைப்பற்றி எல்ரீரீஈ அமைப்பின் நிலைக்கு ஏற்படுத்திய தாக்கம்
(ஊ) 1971 ஜேவீபீ கிளர்ச்சி
(எ) மனிதாபிமானப் போரின் போது கடைசிக் கட்டமான விஸ்வமடுவிற்கு அப்பால்
(ஏ) தருஸ்மான் அறிக்கை மற்றும் யதார்த்தம் - இலங்கை விபரிப்பு
(ஐ) எல்ரீரீஈ இன் தீர்மானமான இயலுமைகளை முறையடிப்பதற்காக செயற்படுத்தப்பட்ட கடற் போர்.
(ஒ) மனிதாபிமானப் போரின் போது அத்தியாவசியச் சேவைகளை நடாத்திச் செல்வதற்காக இலங்கை கடற்படையினரின் பங்கு.
(ஓ) எல்ரீரீஈ பயங்கரவாதத்திற்கு எதிரான வெற்றிக்கான காரணிகள்
(ஔ) முல்லைத்தீவு தோல்வியின் போது ஆட்சி அதிகாரத்தைப் பயன்படுத்தி கற்றுக்கொண்ட பாடங்கள்
(க) மனிதாபிமானப் போரின் போது இலங்கை விமானப் படையின் பங்கு மற்றும் இறுதி முடிவு தொடர்பாக ஏற்படுத்தப்பட்ட தாக்கம்.
(கா) எல்ரீரீஈ இற்கு எதிராக விமானப் போர்ச் செயற்பாடுகள் எல்ரீரீஈ யின் தீர்க்கமான இயலுமையை செயலிழத்தல்.

நீர்	6,148,660	7,347,170
வாடகை மற்றும் வரித் தொகை	6,312,334	5,038,177
சுத்திகரிப்பு சேவைகள்	874,303	677,073
விரிவுரை மற்றும் ஏனைய கட்டணங்கள்	4,184,000	1,577,500
சலவைச் சேவைகள்		268,364
நானாவிதமானவை	2,212,931	3,020,652
	136,080,235	**140,089,672**

குறிப்பு 15 : பெறுமானத்தேய்வு	**2020**	**2019**
கட்டிடங்கள்	**24,926,151**	**24,772,582**
இயந்திரங்களும், பொருத்திகளும்	15,712,605	15,347,286
வாகனங்கள்	2,718,000	2,718,000
தளபாடங்களும் அலுவலக உபகரணங்களும்	13,077,882	11,449,714
கணனி மற்றும் உதிரிப் பாகங்கள்	**21,833,954**	**22,918,314**
நூலகப் புத்தகங்கள்	464,762	464,762
ஆண்டிற்கான பெறுமானத்தேய்வு	**78,733,354**	**77,670,657**

2020 திசெம்பர் 31 ஆம் திகதியில் முடிவுற்ற ஆண்டின் நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புகள்

1. கணக்கீட்டு கொள்கைகள் மற்றும் விபரமான குறிப்புகள்

அ. அறிக்கையிடப்படும் நிறுவகம்

(1) பாதுகாப்புச் சேவைகள் கட்டளை மற்றும் பதவிநிலைக் கல்லூரி 2008 பெப்ரவரி 19 ஆம் திகதி அங்கீகரிக்கப்பட்ட 2008 இன் 05 ஆம் இலக்க பாராளுமன்ற அதிகாரச்சட்டத்தின் மூலம் 2007 ஜனவரி 22 ஆம் திகதி ஸ்தாபிக்கப்பட்டது. இது அன்று நிலவிய இராணுவ கட்டளைகள் மற்றும் பதவிநிலை கல்லூரியின் பதலீடாகும். இராணுவ கட்டளை மற்றும் பதவிநிலைக் கல்லூரி 1998 மார்ச் 16 ஆம் திகதி ஸ்தாபிக்கப்பட்ட நிறுவகமாகும்.

(2) கல்லூரி சபுகஸ்கந்தை மாகொல பிரதேசத்தில் ஸ்தாபிக்கப்பட்டுள்ளது.

(3) பாதுகாப்புச் சேவைகள் கட்டளை மற்றும் பதவிநிலைக் கல்லூரி சுயாதீனமான நிறுவகமாக ஏற்றுக்கொள்ளப்பட்டு நிதி ஏற்பாடு ஒதுக்கப்பட்டதை அடுத்து முதன் முறையாக 2010 ஆம் ஆண்டின் போது நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டிருந்தன.

(ஆ) அடிப்படைச் செயற்பாடுகள் - கல்லூரியின் அடிப்படைச் செயற்பாடுகள் பின்வருமாறாகக் காணப்பட்டன.

(1) கல்லூரியின் கல்விசார் பாடநெறிகளைப் பயில்வதற்காக முப்படையினதும் உத்தியோகத்தர்கள், பொலிஸ் உத்தியோகத்தர்கள் அரச நிறுவகங்களின் உத்தியோகத்தர்கள் மற்றும் வெளிநாட்டு இராணுவ உத்தியோகத்தர்கள் இணைக்கப்படுதல்.

(2) மாணவ உத்தியோகத்தர்களை மதிப்பீடு செய்வதற்காக பரீட்சைகளை நடாத்துதல்.

(3) கல்விசார் பாடநெறிகளை வெற்றிகரமாகப் பயின்ற மாணவ உத்தியோகத்தர்களுக்கு சான்றிதழ்களை வழங்குதலும் பீஎஸ்சீ (சிஜ - உத்தியோகபூர்வப் பெயரை வழங்குதல்)

(இ) தயாரிக்கும் அடிப்படை மற்றும் இணக்கப்பாட்டுக் கூற்று

(1) இணக்கப்பாட்டுக் கூற்று

2019 ஆம் ஆண்டிற்கான நிதி நிலைமைக் கூற்று 2019 ஆம் ஆண்டிற்கான விபரமான வருமானக் கூற்று 2019.12.31 ஆம் திகதியில் முடிவுற்ற ஆண்டிற்கான உரிமை மாற்றற் கூற்று 2019 ஆம் ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் கணக்கீட்டுக் கொள்கைகள் தொடர்பான குறிப்புகளை கல்லூரியின் நிதிக் கூற்றுக்கள் உள்ளடக்கியுள்ளது. இந் நிதிக்கூற்றுக்கள் இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவகத்தின் மூலம் விநியோகிக்கப்பட்ட 2012.01.01 ஆம் திகதி அல்லது அதன் பின்னர் ஆரம்பமாகும் நிதிக் காலப்பகுதிக்காக உரித்தான புதிய இலங்கை கணக்கீட்டு நியமங்களான எல்கேஏஎஸ் மற்றும் எஸ்எல்எப்ஆர்எஸ் என்பவற்றிற்கு இணங்க தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. இந் நிதிக்கூற்றுக்கள் முதற் தடவையாக எஸ்எல்எப்ஆர்எஸ் - 1 இற்கு இணங்கும் வகையில் தயாரிக்கப்பட்டுள்ளது.

(2) அளவீட்டிற்கான அடிப்படை

நிதிக்கூற்றுக்கள் மற்றும் கல்லூரியின் தொடர்ந்து இயங்கும் அடிப்படையில் தயாரிக்கப்பட்டுள்ளதுடன் கணக்கீட்டுக் கொள்கைகள் முழுக் காலப்பகுதியின் போதும் ஒரே வகையில் பயன்படுத்தப்பட்டுள்ளது. நிதிக் கூற்றுக்களில் பணவீக்கத் தாக்கங்களிற்கான சீராக்கங்கள் மேற்கொள்ளப்படவில்லை.

(3) பயன்படுத்தப்படும் மற்றும் சமர்ப்பிக்கப்படும் பண அலகு

புதிய இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியமங்கள் கொள்கைகள் கல்லூரியின் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்படும் திகதியில் அமுலில் இருக்கவில்லை.

இலங்கை கணக்கீட்டு நிறுவகம், நிதி திட்டமிடல் அமைச்சின் பங்கேற்புடன் தயாரிக்கப்பட்ட இலங்கை பொதுத் துறைப் பிரிவின் கணக்கீட்டு நியமங்களின் 2 ஆம் தொகுதியின் படி கல்லூரியின் நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. எதிர்வரும் காலங்களில் பின்வரும் நியமங்களிற்கு இணங்க 2014 ஜனவரி மாதம் 01 ஆம் திகதி முதல் வருடாந்தம் பின்பற்றப்படுவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

எஸ்எல்பீஎஸ்ஏஎஸ் 5 - அன்னிய செலாவணி விகிதாசாரப்படி மாறுபடுதல்

எஸ்எல்பீஎஸ்ஏஎஸ் 6 - குறித்த அறிக்கைத் திகதியின் பின்னரான நிகழ்வுகள்

எஸ்எல்பீஎஸ்ஏஎஸ் 7 - ஆதன, இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள்

எஸ்எல்பீஎஸ்ஏஎஸ் 8 - ஏற்பாடுகள், நிகழத்தக்க பொறுப்புகள் மற்றும் சொத்துக்கள்

எஸ்எல்பீஎஸ்ஏஎஸ் 9 - இருப்புகள்

எஸ்எல்பீஎஸ்ஏஎஸ் 10 - பரிமாற்ற நடவடிக்கைகளின் போது கிடைக்கப்பெறும் வருமானம்

ஈ. முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள்

(1) ஆதனம், இயந்திர உபகரணங்கள்

(அ) இனங்காணலும் அளவீட்டு நடவடிக்கைகளும்

i. ஆதனம், இயந்திர உபகரணங்களின் ஆரம்ப கிரயம் அல்லது மீள்மதிப்பு செய்யப்பட்ட மீதியில் இருந்து பெறுமானத்தேய்வுகள் கழிக்கப்பட்டு காண்பிக்கப்பட்டுள்ளன. 2010 ஆம் ஆண்டின் போது முதற் தடவையாக நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்படுவதற்காக ஆதனம், இயந்திர உபகரணங்கள் 2009.12.31 ஆம் திகதியில் உள்ளவாறு மீள்பெறுமதியிடப்பட்டிருந்தது. பெறுமதி மதிப்பீடு தகைமை பெற்ற நபர்களால் ஆக்கபூர்வமான பெறுமானத்தேய்வு வீதங்கள் மற்றும் சந்தைப் பெறுமதி கருத்திற்கொள்ளப்பட்டு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

ii. கல்லூரிக்கு தெளிவான உரித்தற்ற ஆதனங்கள், இயந்திர உபகரணங்களிற்கு மீள்பெறுமதியிடப்பட்டிராததுடன் அவை கணக்குகளிற்கும் கொண்டுவரப்படவில்லை. எவ்வாறெனினும், அரச பாதுகாப்பு அமைசினாலும் இலங்கை இராணுவத்தினாலும் வழங்கப்பட்டுள்ளன. வாகனங்களின் உரித்து அந் நிறுவகங்களிற்கு உரித்தான போதிலும் அவற்றின் நலன் மற்றும் செலவினங்கள் கல்லூரிக்கு உரித்தாகக் காணப்பட்டமையால் ஆதனங்கள், இயந்திர உபகரணங்களின் கீழ் காண்பிக்கப்பட்டுள்ளன. ஆவ் வாகனங்களின் உரிமை கல்லூரிக்கு கையேற்றுக்கொள்வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

iii. காணிக் கையேற்பிற்காகச் செலுத்தப்பட்டிருந்த முற்பணம் நிதிக்கூற்றுக்களில் ஆதனங்கள், இயந்திர உபகரணங்களாகக் காண்பிக்கப்பட்டுள்ளன.

iv. ஆதனங்கள், இயந்திர உபகரணங்களின் கிரயத்திற்கு அவற்றைக் கையேற்பதற்கு அல்லது நிர்மாணிப்பதற்கு உரித்தாக கிரயம் மற்றும் அச்

சொத்துக்களைப் பயன்பாட்டிற்கு ஏற்ற அளவிற்குக் கொண்டுவருவதற்காக ஏற்கப்படும் சகல செலவினங்களும் உள்ளடக்கப்பட்டுள்ளன.

v. 2012 நிதிக் கூற்றுக்களில் கணனி மற்றும் உதிரிப்பாகங்கள் வெவ்வேறான விடயங்களாக வகைப்படுத்தப்பட்டிருந்ததுடன் இதற்கு இணங்கும் வகையில் 2011.12.31 ஆம் திகதியில் உள்ளவாறு ஆதனங்கள், இயந்திர உபகரணங்களின் கிரயம் மற்றும் பெறுமானத்தேய்வுக் காலம் சீராக்கப்பட்டுள்ளது.

(ஆ) பெறுமானத்தேய்வுகள்

i. ஆதனங்கள், இயந்திர உபகரணங்களின் கிரயத்தில் பின்வரும் பெறுமானத்தேய்வு வீதங்களின் கீழ் பெறுமானத்தேய்விற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

கட்டிடம்	2%
இயந்திர உபகரணங்கள்	12.5%
தளபாடங்கள் மற்றும் அலுவலக உபகரணங்கள்	20%
வாகனங்கள்	20%
கணனி மற்றும் உபகரணங்கள்	20%
நூலகப் புத்தகங்கள் மற்றும் சஞ்சிகைகள்	20%

ii. நிதிச் செயலாற்றல் கூற்றின் பெறுமானத்தேய்வுகள் ஆதன, இயந்திர உபகரணங்களின் மதிப்பிடப்பட்ட ஆயுட்காலத்தின் படி சரளமான முறையின் கீழ் பெறுமானத்தேய்வுகள் இனங்காணப்பட்டுள்ளன. காணி மற்றும் குறை வேலைக்காக பெறுமானத்தேய்வுகள் செய்யப்பட்டிருக்கவில்லை. ஆண்டின் போது கொள்வனவு செய்யப்பட்ட.˙. நிர்மாணிக்கப்பட்ட சகல ஆதன, இயந்திர உபகரணங்களிற்கான பெறுமானத்தேய்வு ஒதுக்கப்பட்டுள்ளது.

iii. ஆண்டின் போது அகற்றப்பட்ட ஆதன, இயந்திர உபகரணங்களிற்காக பெறுமானத்தேய்வுகள் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(இ) அகற்றல்கள் ஆதன, இயந்திர உபகரணங்களின் மதிப்பிடப்பட்ட ஆயுட்காலத்தின் படி நேர் முறையின் கீழ் பெறுமானத்தேய்வுகள் இனங்காணப்பட்டுள்ளன. காணி மற்றும் குறைவேலைக்காக பெறுமானத்தேய்வுகள் செய்யப்பட்டிருக்கவில்லை.

i. ஆதன, இயந்திர உபகரணங்களை அகற்றுகையில் எழும் இலாபம் அல்லது நட்டத்தை அப் பொருள் அகற்றப்படும் ஆண்டின் போது விபரமான வருமானக் கூற்றில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

ii. அகற்றப்படும் ஆதன, இயந்திர உபகரணங்களின் கிரயம் மற்றும் திரண்ட பெறுமானத்தேய்வு நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டுள்ளது.

(2) அரசாங்க மானியத்திற்கான கணக்குகள் வைத்தல்

அ. மீண்டெழும் மானியம் நிதிச் செயலாற்றல் கூற்றில் வருமானமாகக் கருதப்பட்டுள்ளது.

ஆ. மூலதன சொத்துக்களை கையேற்பதற்கும் மேம்படுத்துவதற்குமாக வழங்கப்படும் நிதி மற்றும் மூலதன திரண்ட நிதியத்திற்கு வருமானமாகக் கருதப்பட்டுள்ள அதேவேளை சொத்துக்களின் ஆயுட் காலத்தின் போது அம் மானியங்கள் நிதி செயலாற்றல் கூற்றுக்களில் இனங்காணப்பட்டிருந்தது.

இ. அரசாங்கத்தால்/ அரசுடன் ஒருங்கிணைந்த நிறுவகங்களில் இருந்து ஆண்டின் போது கல்லூரிக்குக் கிடைக்கப்பெற்ற நிதியல்லாத மானியங்களின் பெறுமதி சொத்துக்கள் மற்றும் மானியங்களாக நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டுள்ளன.

(3) காசுப்பாய்ச்சல் கூற்று

(4)

அ. இலங்கை பொதுத் துறைக் கணக்கீட்டு நியமம் இல. 20 இன் படி நேர் முறை பயன்படுத்தப்பட்டு காசுப் பாய்ச்சல் கூற்று தயாரிக்கப்பட்டுள்ளது.

ஆ. ஆண்டின் போது நிதியல்லா மானியமாகக் கிடைக்கப ்பெற்ற மானியங்கள் காசுப்பாய்ச்சல் கூற்று தயாரிக்கையில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

(5) பொறுப்புகள் மற்றும் ஒதுக்கங்கள் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்படுகையில் சகல இனங்காணப்பட்ட பொறுப்புகளும் கணக்கீடு செய்யப்பட்டுள்ளன.

(6) வருமானத்தை இனங்காணல்

கல்லூரியின் வருமானத்திற்கு மீண்டெழும் தன்மையிலான அரசாங்க மானியம் மற்றும் ஏனைய மானியங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன. சுகல வருமானம் மற்றும் செலவினங்கள் அட்டுறு அடிப்படையில் இனங்காணப்பட்டுள்ளது.

(7) ஊழியர் நலன்கள் - நிர்ணயிக்கப்பட்ட பங்களிப்புத் திட்டம்

நிர்ணயிக்கப்பட்ட பங்களிப்புத் திட்டத்திற்காக உள்ள பிணைப்பு நிதிச் செயலாற்றல் கூற்றில் செலவினமாக இனங்காணப்பட்டுள்ளது. நிதிச் செயலாற்றல் கூற்றில் செலலினமாக இனங்காணப்பட்டுள்ளது. சிவில் ஊழியர்களின் ஊதியத்தில் 12% ஆன பங்களிப்புகள் அரசாங்க சேவைகள் சேமலாப நிதியத்திற்கு கல்லூரியால் அனுப்பி வைக்கப்பட்டிருந்தது.

(8) ஏனைய செயற்பாடற்ற செலவினங்கள்

நிதிச் செயலாற்றல் கூற்றில் மிகை/ பற்றாக்குறை கணிப்பிடுகையில் கல்லூரியை நடாத்திச் செல்வதற்கான சகல செலவினங்களுடன் மூலதனச் சொத்துப் பராமரிப்பிற்கான செலவினமும் கருத்திற்கொள்ளப்பட்டுள்ளது.

(9) ஒப்பீட்டு ரீதியான தகவல்கள்

மீளாய்வாண்டில் சமர்ப்பிக்கப்பட்டவைகளுடன் ஒப்பிடக் கூடியவகையலான ஒப்பீட்டு எண்ணிக்கைகள் தேவையான வகையில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

(10) நிதி நிலைமைக் கூற்றுத் தினத்தின் பின்னைய நிகழ்வுகள்

நிதி நிலைமைக் கூற்றுத் தினத்தின் பின்னர் போதுமான நிகழ்வுகளுக்காக தேவையான வகையில் சீராக்கங்கள் முறையாக நிதிக்கூற்றுக்களில் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

(11) தொடர்புடைய தரப்பினரின் செயற்பாடுகள்

(அ) முப்படையினரால் நிறுவக ரீதியாக 87 உத்தியோகத்தர்களும் சக ஊமியர்கள் 610 பேர் கல்லூரிக்காக ஈடுபடுத்தப்பட்டிருந்ததுடன் அவர்களது சம்பளம் மற்றும் படிப்பணங்களுக்கான செலவினங்கள் குறித்த இராணுவத்தினால் ஏற்கப்படுகின்றது. 2020 ஆம் ஆண்டிற்காக உரிய இராணுவத்தினால் செலுத்தப்பட்ட சம்பளங்களும் படிப்பணங்களும் பின்வருமாறாகக் காணப்பட்டன.

இலங்கை இராணுவம் - ரூபா 373,144,808.00

இலங்கை கடற்படை - ரூபா 125,565,689.00

இலங்கை விமானப் படை - ரூபா 109,569,948.00

(ஆ) இலங்கை விமானப் படை மற்றும் இலங்கை கடற்படையினால் 03 வாகனங்கள் கல்லூரிக்காக ஈடுபடுத்தப்பட்டிருந்ததுடன் அவ்வாகனங்களின் பராமரிப்புச் செலவினங்கள் அவர்களால் ஏற்கப்பட்டிருந்தது.

இணைப்பு இ
வருடாந்த அறிக்கை 2020

2020 ஆம் ஆண்டிற்கான வருடாந்த அறிக்கைக்காக உள்ளகக் கணக்காய்வு உத்தியோகத்தரின் கூற்று

1. 2020.12.31 இல் முடிவுற்ற நிதி ஆண்டின் போது உள்ளகக் கணக்காய்வு நோக்கங்களை எய்துவதற்காக உள்ளகக் கணக்காய்வுத் திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டு செயற்பாட்டிற்குக் கொண்டுவருவதே இவ் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவின் அடிப்படைச் செயற்பாடாகும். அங்கு உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமை, நிதிப் பிரமாணம் என்பவற்றிற்கு இணங்க செயற்படுவது வழங்கல் வழிகாட்டல்களின் படி கொள்வனவு நடைமுறைகளை மேற்கொள்வது, இருப்புக் கட்டுப்பாடு முகாமைத்துவத் திட்டம் ஆக்கபூர்வமாகவும் முடிவுக் கணக்குகளின் தயாரிப்பு மற்றும் சமர்ப்பிப்பு போன்ற சகல துறைகளும் உள்ளடங்கும் வகையிலான பின்வரும் விடயங்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் கவனத்தை ஈர்ப்பதுடன் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக கூட்டங்களின் போதும் கலந்துரையாடலுக்கு எடுத்துக்கொள்ளப்படுகின்றது.

(அ) 2019 ஆம் ஆண்டிற்கு உரித்தான நிதி அறிக்கை மீளாய்வு செய்யப்படுதல் மற்றும் எதிர்வரும் ஆண்டின் போது மேம்படுத்தப்பட வேண்டிய துறைகள் தொடர்பான அறிவுறுத்தல்களை வழங்குதல்.

(ஆ) கணக்கீட்டு முறைமையில் ஆக்கபூர்வமான விருத்தியை மேற்கொள்வதற்காக கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்படுவதற்காக வழிநடாத்தல்.

(இ) கொள்வனவு நடவடிக்கைகளில் நிலவும் குறைபாடுகள் மற்றும் கொள்வனவு வழிகாட்டல் கோவை ஏற்பாடுகளின் பிரகாரம் அக் குறைபாடுகளைச் சீராக்கும் முக்கியத்துவம் குறித்து எடுத்துக் காட்டுதல்.

(ஈ) பொதுத் திறைசேரியில் இருந்து அங்கீகரிக்கப்பட்ட ஏற்பாடுகளின் படி, கல்லூரியின் மீண்டெழும் செலவினம் மற்றும் மூலதனச் செலவினம் மீளாய்வு செய்யப்படுதல்.

(உ) கல்லூரியின் கணக்கீட்டு நடவடிக்கைகள் மற்றும் ஏனைய நடவடிக்கைகளின் போது அரசாங்க சுற்றறிக்கைகள் மற்றும் நிதிப் பிரமாணங்கள் பின்பற்றப்பட வேண்டியதன் முக்கியத்துவம்.

(ஊ) 2020 ஆம் ஆண்டிற்கான செயற்பாட்டுத் திட்டம் மற்றும் கொள்வனவு திட்டம் மீளாய்வு செய்யப்பட்டு இதற்கமைய இனங்காணப்பட்ட குறைபாடுகள் எதிர்வரும் ஆண்டின் போது சீராக்கப்படுவதன் முக்கியத்துவம்.

2. மேலே சுட்டிக்காட்டப்பட்ட விடயங்கள் தொடர்பாக முகாமைத்துவத்தினால் கவனம் செலுத்தப்பட்டு சீராக்கங்களை மேற்கொள்ளுமாறு கோரப்பட்டுள்ளது.

3. 2020.12.31 ஆம் திகதியில் முடிவுற்ற ஆண்டிற்கான கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்கள் 3 தடவைகள் நடாத்தப்பட்டுள்ளன. இதற்கான அவதானிப்பாளர்களாக தேசிய கணக்காய்வு அலுவலகத்தின் பிரமுகர்களும் அரச பாதுகாப்பு அமைச்சின் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவின் பிரமுகர்களும் கலந்து கொண்டு அச் செயற்பாடுகளை வெற்றிகரமாக மேற்கொள்வதற்குத் தேவையான ஒத்துழைப்பை வழங்கியமை குறித்தும் மகிழ்ச்சியுடன் நினைவுகூறுகின்றேன்.


சீஎஸ் ஹெட்டிஆரச்சி
உள்ளகக் கணக்காய்வாளர்

01. <u>பாதுகாப்புச் சேவைகள் கட்டளை மற்றும் பதவிநிலைக் கல்லூரி மாணவ உத்தியோகத்தர்களின் முதலாம் தவணையில் இருந்து நான்காம் தவணை வரையிலான கல்வி அபிவிருத்தி மற்றும் முன்னேற்றம்.</u>

		முதலாம் கல்வித் தவணை					இரண்டாம் கல்வித் தவணை				
தொ.இல	குறிப்பு	>80% விசேட திறமை	70 - 80% மிக நன்று	50 - 70% நன்று	40 - 50% சாதாரனம்	<40% சாதாரணத்திலும் குறைவு	>80% விசேட திறமை	70 - 80% மிக நன்று	50 - 70% நன்று	40 - 50% சாதாரனம்	<40% சாதாரணத்திலும் குறைவு
1.	கட்டளை மற்றும் நிறைவேற்று நிலைக் கடமைகள் தொடர்பான கற்கை பாட நடவடிக்கைகளின் முன்னேற்றம்	3.75%	8.64%	79.66%	7.40%	0.55%	4.94%	18.08%	67.6%	7.75%	1.63%
2.	பட்டப் பின்படிப்பு கற்கையின் பாடங்களில் சித்தி குறித்த முன்னேற்றம் சதவீதம்	100%					100%				

		மூன்றாம் கல்வித் தவணை					நான்காம் கல்வித் தவணை				
தொ.இல	குறிப்பு	>80% விசேட திறமை	70 - 80% மிக நன்று	50 - 70% நன்று	40 - 50% சாதாரனம்	<40% சாதாரணத்திலும்	>80% விசேட திறமை	70 - 80% மிக நன்று	50 - 70% நன்று	40 - 50% சாதாரனம்	<40% சாதாரணத்திலும்
1.	கட்டளை மற்றும் நிறைவேற்று நிலைக் கடமைகள் தொடர்பான கற்கை பாட நடவடிக்கைகளின் முன்னேற்றம்	6.67 %	33.24 %	55.46 %	2.64%	1.83 %	11.88 %	24.17%	57.34 %	6.03 %	0.53 %
2.	பட்டப் பின்படிப்பு கற்கையின் பாடங்களில் சித்தி குறித்த முன்னேற்றம் சதவீதம்	100%					100%				

முதலாம் தவணையில் இருந்து நான்காம் தவணை வரை




செயலாற்றல் குறியீடு (Key Performance)

தொடர் இல.	செயலாற்றல் குறியீடு	செயலாற்றல் அளவீடு	எய்தப்பட்ட இலக்குகள்
01	கல்விசார் குறியீடு (Academic Indicator) அ. மாணவர் பங்கேற்புக் குறியீடு (Student Participation Indicator)	அ. முப்படை மாணவர்களின் பங்கேற்பு 132 வரை அதிகரித்துள்ளது. ஆ. நிறைவேற்றுத்தர பாடநெறிகளில் சித்தியடைதல் சதவீதம் உச்ச அளவில் விருத்தி செய்தல் இ. பாதுகாப்புக் கல்லூரியில் (M Def SS) உரித்தைப் பெறும் சதவீதத்தை படிப்படியாக விருத்தி செய்தல் (ஈ) வெளிநாட்டு மாணவர்களின் பங்கேற்பை படிப்படியாக விருத்தி செய்தல்.	அ. 2019 ஆம் ஆண்டின் போது மாணவர்களின் பங்கேற்பு 160 ஆகக் காணப்பட்டதுடன் இது 2020 ஆம் ஆண்டின் போது 150 மாணவர்கள் வரை அதிகரித்திருந்தது. ஆ. 2019 ஆம் 2020 ஆம் ஆண்டுகளின் போது கலந்து கொண்ட வெளிநாட்டு மாணவர்களின் எண்ணிக்கை 18 ஆகக் காணப்பட்டது.


01 கல்விசார் குறியீடு (Academic Indicator)

மாணவர் பங்கேற்புக் குறியீடு


அ. நிறைவேற்றுத்தரப்பினரின் பாடநெறிக்கு முப்படை உத்தியோகத்தர்களின் பங்கேற்பில் விருத்தி




ஆ. நிறைவேற்றுத்தர பாடநெறிகளில் சித்தியடைதல்



இ. பாதுகாப்புக் கற்கைக்கு உரித்தாதல் MSc (Defence Studies)



ஈ. **<u>உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு மாணவர்களின் பங்கேற்பு</u>** 2020 ஆம் ஆண்டின் போது உள்நாட்டு உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை 132 ஆகக் காணப்பட்டதுடன் வெளிநாட்டு மாணவ உத்தியோகத்தர்களின் பங்கேற்பு 18 ஆகக் காணப்பட்டது.




<u>எய்தப்பட்ட செயலாற்றல் குறியீடு (Target Reached for Key Performance Indicators)</u>

தொடர் இல. S/No	<u>செயலாற்றல் குறியீடு</u> (Key Performance Indicator)	செயலாற்றல் அளவீடு (Measurement)	எய்தப்பட்ட இலக்குகள் (Target/Milestone reached)
01	அ. ஆய்வு செய்யப்படும் நூல்களின் தரத்தையும் அளவீட்டையும் விருத்தி செய்தல். ஆ. பயிற்சி நடவடிக்கைகளுக்குத் தேவையான புதிய உதிரிப்பாகங்களை போதுமான அளவிலும் தரமாகவும் விருத்தி செய்தல்	அ. 2019 ஆம் ஆண்டின் போது காணப்பட்ட நூல்களின் எண்ணிக்கை 12467 ஆனதுடன் இது 2020 ஆம் ஆண்டின் போது 12949 வரை விருத்தி செய்வதற்கு முடிந்தது. ஒட்டுமொத்த நூலக நடவடிக்கைகளும் கணனி மயமாக்கப்பட்டுள்ளன.	அ. கல்லூரிக்கு பயிற்சி நடவடிக்கைகளுக்காக ரூபா 7.71 மில்லியன் தொகையான செலவினம் மேற்கொள்ளப்பட்டு மூலதனப் பொருட்கள் கொள்வனவு செய்யப்பட்டுள்ளன. ஆ. ரூபா 6.4 மில்லியன் செலவிடப்பட்டு பயிற்சி நடவடிக்கைகளுக்காக கணனி மற்றும் ஏனைய உபகரணங்கள் கொள்வனவு செய்யப்பட்டுள்ளன.

02. **<u>கல்விசார் அபிவிருத்தியின் குறியீடு (Academic Development Indicator)</u>**

அ. நூலக வசதிகள் விருத்தியடைதல்.



கட்டுப்படுத்தப்பட்டது

இணைப்பு உ
வருடாந்த அறிக்கை 2020

டீஈஎப்/டீ/டீஎஸ்சீஎஸ்சீ/01/20/05 2021 ஜூலை 13

படை அதிகாரி
பாதுகாப்புச் சேவைகள் கட்டளை மற்றும் பதவிநிலைக் கல்லூரி
சபுகஸ்கந்த

பாதுகாப்புச் சேவைகள் கட்டளை மற்றும் பதவிநிலைக் கல்லூரியின் 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மற்றும் ஏனைய சட்டரீதியான மற்றும் பிரமாணரீதியான தேவைப்பாடுகள் மீது 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 12 ஆம் பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை

---

1. நிதிக்கூற்றுக்கள்

1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

பாதுகாப்புச் சேவைகள் கட்டளை மற்றும் பதவிநிலைக் கல்லூரியின் 2020 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விபரமான வருமானக்கூற்று உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப் பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள் பொழிப்பாக்கிய முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளையும் உள்ளடக்கிய 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையின் பிரகாரம் எனது அறிக்கை காலக்கிரமத்தில் பாராளுமன்றத்தில் முன்வைக்கப்படும்.

எனது அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படைப் பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து, பதவிநிலைக் கல்லூரியின் 2020 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப் பாய்ச்சலானது இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையினை பிரதிபலிக்கின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

(அ) ஹெய்யன்துடுவ இளைஞர் சேவைகள் மன்றத்திற்கு உரித்தான 11 ஏக்கர் காணியில் கல்லூரியால் கட்டிடங்கள் நிர்மாணிக்கப்பட்டு அவற்றைப் பயன்படுத்திவந்த போதிலும் அக் காணியின் சட்டரீதியான உரித்தை நடைமுறையாண்டின் திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலும் மாற்றிக்கொண்டிருக்கவில்லை. இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்கள் 07 மற்றும் 87 (அ) இன் பிரகாரம் இவ் உரித்து வரையறை தொடர்பாக நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்கள் 07 மற்றும் 47 ஆம் பந்தியின் பிரகாரம் சொத்துக்கள் மூன்றாண்டுகளுக்கு அல்லது ஐந்தாண்டுகளுக்கு ஒருமுறை மீள்பெறுமதியிடப்பட வேண்டிய போதிலும் பதவிநிலைக் கல்லூரியின் ரூபா 1,352.15 மில்லியன் பெறுமதியான காணி மற்றும் கட்டிடங்கள் கல்லூரி ஆரம்பிக்கப்பட்ட 2008 ஆம் ஆண்டு முதல் மீளாய்வாண்டு வரையிலும் மீள்பெறுமதியிடப்பட்டு சொத்துக்களின் நியாயப்

பெறுமதி நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே, சொத்துக்கள் மீள்பெறுமதியிடப்படுகையில் ஒரே வகுப்பிற்கு உரித்தான சொத்துக்களும் மீள்பெறுமதியிடப்பட்டு கணக்குகளில் சீராக்கப்பட வேண்டிய போதிலும் இது தொடர்பாக கருத்திற்கொள்ளப்படாது ரூபா 388,277,669 கிரயமான 2060 சொத்துக்கள் 2019 திசெம்பர் 30 இன் போது மீள்பெறுமதியிடப்பட்டிருந்ததுடன் இச் சொத்துக்களில் முற்றாகப் பெறுமதியிடப்பட்டிருந்த 257 சொத்துக்களின் மீள்பெறுமதியிடப்பட்ட பெறுமதியான ரூபா 33,477,246 தொகையான பெறுமதி மாத்திரம் நிதிக்கூற்றுக்களில் சீராக்கப்பட்டிருந்தன. அவ்வாறே, இச் சொத்துக்களின் மீள்பெறுமதியீடு தொடர்பாக இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 7 இல் குறிப்பிடப்பட்ட நியதிகளுக்கு இணங்க நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தல்கள் மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை.

(இ) இராணுவத்தினால் பதவிநிலைக் கல்லூரிக்கு வழங்கப்பட்டிருந்த ரூபா 1,375,000 பெறுமதியான லான்ட் குரூஷர் ஜீப் வண்டி 2020 ஒக்டோபர் 14 இராணுவத்திற்கு மீள ஒப்படைக்கப்பட்டிருந்த போதிலும் அவ் ஜீப் வண்டியின் பெறுமதி வாகனக் கணக்கில் இருந்தும் திரண்ட பெறுமானத்தேய்வுக் கணக்கில் இருந்தும் அகற்றப்பட்டிருக்கவில்லை. இதன் படி, கல்லூரின் வாகனப் பெறுமதி ரூபா 1,375,000 இனால் அதிகரித்து நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஈ) 2020 திசெம்பர் 16 ஆம் திகதி கல்லூரிக்குக் கிடைக்கப்பெற்றிருந்த ரூபா 1,246,900 பெறுமதியான கணனி மற்றும் உதிரிப்பாகங்கள் கணக்கிடப்பட்டு அதற்கு உரித்தான பெறுமானத்தேய்வுகளுடன் நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) நடைமுறையாண்டின் திசெம்பர் மாதத்திற்கு உரித்தான ரூ 2,506,916 தொகையான செலவினம் நிலுவைச் செலவினமாக கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. இதன்படி, மீளாய்வாண்டிற்கு உரித்தான கல்லூரியின் மீண்டெழும் செலவினம் அதே தொகையால் குறைத்தும் மிகை அதே தொகையால் அதிகரித்தும் நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தன.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

1.3 பாதுகாப்புச் சேவைகள் கட்டளை மற்றும் பதவிநிலைக் கல்லூரியின் 2020 ஆம் ஆண்டிற்கான ஆண்டறிக்கையில் உள்ளடக்கப்பட்ட ஏனைய தகவல்கள்

இக்கணக்காய்வு அறிக்கைத் திகதிக்குப் பின்னர் எனக்கு வழங்கப்படுவதற்கு எதிர்பார்க்கின்ற பதவிநிலைக் கல்லூரியின் 2020 ஆம் ஆண்டிற்கான அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ள எனினும் நிதிக்கூற்றுக்கள் மற்றும் அது தொடர்பான எனது கணக்காய்வு அறிக்கையில் உள்ளடக்கப்படாத தகவல்கள் மற்றும் ஏனைய தகவல்களாகக் கருதப்படுகின்றன. இத்தகைய ஏனைய தகவல்கள் தொடர்பில் முகாமைத்துவம் பொறுப்பாக இருத்தல் வேண்டும்.

நிதிக்கூற்றுக்கள் மீதான எனது அபிப்பிராயம் ஏனைய தகவல்களை உள்ளடக்கியிருக்காததுடன் நான் அவை மீது எவ்வகையிலும் சான்றுறுதிப்படுத்தலையோ அபிப்பிராயத்தையோ வெளிப்படுத்தவில்லை.

நிதிக்கூற்றுக்கள் மீதான எனது கணக்காய்வு தொடர்பாக, எனது பொறுப்பானது மேலே இனங்காணப்பட்ட ஏனைய தகவல்களை பெற்றுக் கொள்ளக்கூடியதாக இருக்கையில் வாசித்தல்

மற்றும் அவ்வாறு செய்யும் போது ஏனைய தகவல்களை நிதிக்கூற்றுக்களுடன் அல்லது கணக்காய்வின் போது ஏனைய வகையில் பெற்றுக்கொள்ளப்பட்ட எனது அறிவின் பிரகாரம் பொருண்மையாக பொருத்தமற்றுள்ளதா என்பதனை கவனித்துப் பார்ப்பதாகும்.

பதவிநிலைக் கல்லூரியின் 2020 ஆம் ஆண்டிற்கான ஆண்டறிக்கையை நான் வாசிக்கையில் அதில் பொருண்மையான பிழையாகக் காட்டுதல் உள்ளது என முடிவுக்கு வந்தால் சரிசெய்வதற்காக நிர்வகிக்கின்ற தரப்பினர்களுக்கு இவ்விடயங்களை நான் தெரியப்படுத்தல் வேண்டும். மேலும் சரிசெய்யப்படாத பொருண்மையான பிழையாகக் காட்டுதல்கள் இருக்குமாயின் அவற்றை அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையின் பிரகாரம் என்னால் காலக்கிரமத்தில் பாராளுமன்றத்தில் முன்வைக்கப்படுகின்ற அறிக்கையில் உள்ளடக்கப்படும்.

1.4 நிதிக்கூற்றுக்கள் மீது முகாமைத்துவத்தினதும் நிருவகிக்கின்ற தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்தும் சரியாகவும் நியாயமாவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூய பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்ற நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு இயலுமான வகையில் தேவையான உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தீர்மானித்தலும் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது பதவிநிலைக் கல்லூரியின் தொடர்ந்து இயங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான இயலுமையினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமாக வெளிப்படுத்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாக உள்ளதுடன் பதவிநிலைக் கல்லூரியைக் கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்றுவழி இல்லாதுவிட்டால் செயற்பாடுகளை நிறுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்து செயற்படும் கணக்கீட்டு அடிப்படையினை பயன்படுத்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

பதவிநிலைக் கல்லூரியின் நிதி அறிக்கையிடல் நடைமுறை சம்பந்தமான பரீட்சிப்பதற்கான பொறுப்பு, நிருவகிக்கின்ற தரப்பினர்களால் வகிக்கப்படுகின்றது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) உப பிரிவின் பிரகாரம் பதவிநிலைக் கல்லூரியின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் அனைத்து வருமானங்கள், செலவுகள், சொத்துக்கள், பொறுப்புக்கள் என்பன தொடர்பாக முறைப்படியாக ஏடுகள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

1.5 கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்றவை என்பதற்கு நியாயமான உறுதிப்பாட்டை வழங்குவதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்கின்ற கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையை வழங்குவதும் எனது குறிக்கோளாகும். நியாயமான உறுதிப்பாடானது உயர் மட்டத்திலான ஒரு உறுதிப்பாடாகக் காணப்படுகின்ற போதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எவ்வேளையிலும் பொருண்மையான பிறழ் கூற்றுக்களை வெளிப்படுத்தும் என்பதற்கான ஒரு உத்தரவாதமாக இருக்கமாட்டாது. மோசடிகள் மற்றும் தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கத்தை ஏற்படுத்துவதன் காரணமாக பொருண்மையான பிறழ்கூற்றுக்கள் ஏற்படக்கூடியதுடன் இந் நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துபவர்களால் எடுக்கப்படுகின்ற பொருளாதார தீர்மானங்கள் தொடர்பாக தாக்கத்தை ஏற்படுத்தலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.

கட்டுப்படுத்தப்பட்டது

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம், கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது தொழில்சார் தீர்ப்புக்களை மேற்கொண்டு தொழில்சார் ஐயப்பாட்டினை பேணுகிறேன். மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் ஆபத்துக்களை இனங்காண்பதற்கும் மதிப்பீடு செய்வதற்குமாக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளல். தவறாகக் காட்டுவது காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து இடம்பெறுகின்ற தாக்கங்களை விட தவறான கூட்டிணைவால், போலி ஆவணங்களைத் தயாரிப்பதனால், வேண்டுமென்றே விட்டுவிடுவதனால், பிழையாகக் காட்டுவதனால் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதனால் ஏற்படும் ஆபத்தின் விளைவானது அதிகமாகும்.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளகக் கட்டுப்பாடுகள் மீதான அறிவு பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்தப்படுகின்ற கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தத்தன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை மற்றும் முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புபட்ட வெளிப்படுத்தல்களும் மதிப்பீடு செய்யப்பட்டது.

- சம்பவங்கள் அல்லது நிலைமைகளின் காரணமாக பதவிநிலைக் கல்லூரியின் தொடர்ச்சியான நிலைத்திருத்தல் மீது பொருண்மையான நிச்சயமற்றதன்மை காணப்படுகின்றதா என்பது சம்பந்தமாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு கணக்கீட்டிற்காக நிறுவனத்தின் தொடர்ச்சியான நிலைத்திருத்தல் மீதான அடிப்படையினை பயன்படுத்துதலின் பொருத்ததன் தன்மை தீர்மானிக்கப்பட்டது. போதியளவான நிச்சயமற்றதன்மை காணப்படுகின்றது என நான் முடிவு செய்தால் நிதிக்கூற்றுக்களில் அது சம்பந்தமான வெளிப்படுத்தல்களுக்கு எனது கணக்காய்வு அறிக்கையில் கவனம் செலுத்தப்பட வேண்டியுள்ளதுடன் அந்த வெளிப்படுத்தல்கள் போதியவையல்லாததாக எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. அபிப்பிராயம் திருத்தப்படுதல் வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால சம்பவங்கள் அல்லது நிலைமைகள் நிலைமைகள் தொடர்ச்சியாக நிலைத்திருத்தலை முடிவுறுத்த நேரிடலாம்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடங்கல்களுக்காக அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளது எனவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

எனது கணக்காய்வின் போது இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு காண்புகள், மற்றும் உள்ளடக்கப்பாடுகளிலுள்ள ஏனைய விடயங்களிற்கிடையேயான ஏதாவது பலவீனங்கள் தொடர்பாக நிருவகிக்கப்படுகின்ற தரப்பினர்களுக்குத் தெரியப்படுத்துகின்றேன்.

2. ஏனைய சட்ட மற்றும் ஒழுங்குபடுத்துதல் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2.1 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தில் பின்வரும் தேவைப்பாடுகள் சம்பந்தமாக விசேட ஏற்பாடுகள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

கட்டுப்படுத்தப்பட்டது

2.1.1 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 12 (அ) பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் கணக்காய்விற்குத் தேவையான அனைத்து தகவல்களும் வெளிப்படுத்தல்களும் என்னால் பெற்றுக் கொள்ளப்பட்டதுடன் எனது பரிசோதனையிலிருந்து தோன்றும் வகையில் முறையான நிதி அறிக்கைகளை பதவிநிலைக் கல்லூரி பேணி வந்துள்ளது.

2.1.2 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருக்கின்றன.

2.1.3 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6 (i) (ஈ) (iv) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளுக்கு இணங்க முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

2.2 பின்பற்றப்பட்ட நடைமுறைகள் அடிப்படையில் மற்றும் பெற்றுக்கொள்ளப்பட்ட சான்றுகள் பொருண்மையான விடயங்களுக்கான மட்டுப்பாடுகளுக்குள் காணப்பட்டன. எனினும், வேறு எதுவும் எனது கவனத்திற்கு உட்பட்டிருக்கவில்லை.

2.2.1 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 12(ஈ) பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளுக்கு இணங்க பதவிநிலைக் கல்லூரியின் நிர்வாக சபையின் அங்கத்தவர்கள் எவருக்கும் பதவிநிலைக் கல்லூரியுடன் சம்பந்தப்பட்ட ஏதேனும் உடன்படிக்கை சம்பந்தமாக நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ வழமையான வணிக செயற்பாடுகளுக்குப் புறம்பாக தொடர்புகள் காணப்படுகின்றமையை குறிப்பிடுதல்.

2.2.2 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 12(ஊ) பிரிவில் குறிப்பிட்ட தேவைப்பாடுகளுக்கு இணங்க பின்வரும் அவதானிப்புக்களைத் தவிர்த்து ஏதாவது தொடர்புபட்ட எழுத்திலான சட்டங்களுக்கு அல்லது பதவிநிலைக் கல்லூரியின் நிருவாக சபையினால் வழங்கப்பட்ட ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுக்கு இணங்கியொழுகாதமையை குறிப்பிடல்.

சட்டங்கள் / பணிப்புரைக்கான தொடர்பு	**அவதானிப்பு**
(அ) அரச நிதி திணைக்களத்தின் பீஎப்/எப்டீ/04/198 ஆம் இலக்கம் மற்றும் 2016 சனவரி 05 ஆம் திகதிய கடிதம்	புதவிநிலைக் கல்லூரியின் சிவில் பாவியணி தொடர்பாக வழங்கப்படும் இடர் கடன் தீர்மானத்திட்டத்திற்கு உரித்தான கடன் வழங்கல் மற்றும் அறவீடுகள் தொடர்பான நிபந்தனைகள் உள்ளடக்கப்பட்ட சுற்றறிக்கை விநியோகிக்கப்படவோ அல்லது நியதிச்சட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.
(ஆ) 1980 இன் 46 ஆம் இலக்க ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதி அதிகாரச்சட்டம்	கல்லூரியின் சிவில் பாவியணி தொடர்பாக 2009 ஆம் ஆண்டு முதல் பங்களிப்புத் தொகை ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதிக்கு செலுத்தப்பட்டிருக்கவில்லை.

- 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 12(எ) பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம், கல்லூரியின் அதிகாரம், பணி மற்றும் செயற்பாடுகளுக்கு இணங்காத வகையில் செயற்பட்டுள்ளதாகவும்.

- 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 12(ஏ) பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம், பதவிநிலைக் கல்லூரியின் வளங்கள் சிக்கனமாகவும், வினைத்திறனான முறையிலும், ஆக்கபூர்வமாகவும் குறித்த கால எல்லைக்குள் குறித்த சட்டங்கள் மற்றும் விதிகளுக்கு இணங்கும் வகையில் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்படவில்லை எனவும்

2.3 ஏனைய கணக்காய்வு அவதானிப்புகள்

(அ) பதவிநிலைக் கல்லூரியில் கல்விசார் நடவடிக்கைகளுக்குத் தேவையான நான்கு மாடிப் பரீட்சை மண்டபமும் நூலகக் கட்டிடமொன்றை நிர்மாணிப்பதற்காக 2017 ஒக்டோபர் 06 ஆம் திகதி ரூபா 115,878,415 இற்கு ஒப்பந்த நிறுவகத்துடன் உடன்படிக்கை மேற்கொள்ளப்பட்டிருந்தது. 2018 திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலும் கட்டிடத்தின் வேலைகள் பூர்த்தியாவதற்கு உரிய இறுதிப் பட்டியலும் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. எவ்வாறெனினும், அக் கட்டிடத்தின் மேல்மாடியில் நீர்க் கசிவு ஏற்பட்டிருந்தமையால் கல்லூரியால் பட்டியற் கொடுப்பனவு இடைநிறுத்தப்பட்டிருந்த போதிலும் பட்டியற் கொடுப்பனவு இடைநிறுத்தப்பட்டு இரு ஆண்டுகள் கடந்திருந்த போதிலும் நீர்க் கசிவிற்கு உரித்தான புனர்நிர்மாணப் பணிகள் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஆ) எரிபொருள் கொள்வனவிற்காக இராணுவத்திற்காகச் செலுத்தப்பட வேண்டிய ரூபா 10,992,853 தொகையான கடன் மீதி 5 ஆண்டுகளுக்கு மேலான காலமாக தீர்க்கப்படாதிருந்தது.

டபிள்யூ.பீ.சீ.விக்ரமரத்ன
கணக்காய்வாளர் தலைமை அதிபதி